பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 16 சனிக்கிழமை (31-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:249

# சுதந்திரக் கூட்டமைப்பில் குழப்பம் தலைதூக்குகிறது!

## பொறுப்பற்ற ஜே.வி.பியால் கடுப்புற்றுள்ளார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை31

**அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி., சமாதான முயற்சி மற்றும் விடயங்களில் கடைப்பிடித்து வரும் தீவிர - கடும் - போக்குக் காரணமாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் குழப்பங்கள் முற்றிவருகின்றன.**

**ஜே.வி.பியினரின் பொறுப்பற்ற போக்கால் கடுப்புற்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பியைத் தூக்கி எறிந்து செயற்பட வேண்டிய கட்டத்துக்கு - கட்டாயத்திற்கு - வந்துள்ளார் என்றும், தாய்லாந்தில் இருந்து அவர் திரும்பியதும் தீர்க்கமான ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்படுவார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.**

ஆட்சியைக் கைப்பற்றினால் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பேன் என்ற உறுதிமொழியைக் கூறி ஆட்சியைப் பிடித்த சந்திரிகா குமாரதுங்க, பொதுத் தேர்தல் முடிந்து நான்கு மாதங்களாகியும் அமைதி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் தடுமாறுகின்றார்.

அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. போடும் தடுக்குக் காரணமாகவே சமாதான முயற்சிகளில் முன்னும் நகர முடியாமல், பின்னும் செல்ல முடியாமல் இக்கட்டில் சிக்கும் நிலைக்கு உள்ளாகியிருக்கிறார் ஜனாதிபதி.

வடக்கு - கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக புலிகள் வைத்துள்ள யோசனை குறித்து பேசுவதற்கு இணங்காமல் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது சாத்திமல்ல என்ற யதார்த்தத்தை அவர் நன்கு உணர்ந்துள்ளார்.

ஆனால், அந்தத்திசையில் அவரை நகர விடாமல் தடுத்து வருகின்றது அவரது அரசின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் எம்.பிக்களுடன் அமெ. பிரதிநிதி சந்திப்பு

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணைச்செயலாளர் டேவிட் காம்ப் நேற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

தடைப்பட்டுப்போயுள்ள இலங்கை சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் -

அவை விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி நிர்வாகசபையை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் - (16ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளுக்கு பதவி நியமனம் பாரபட்சத்தை ஆட்சேபித்து மறியல்!

### திங்களன்று யாழ். செயலகம் முன்

பட்டதாரிகளுக்கு அரசசேவையில் நியமனம் வழங்கும் விடயத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பாரபட்சத்தைக் கண்டித்து எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். செயலகம் முன்பாக இருமணிநேரம் அடையாள மறியல் போராட்டம் நடத்தப்படவிருக்கிறது.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் காலை 8.30 மணிமுதல் 10.30 மணிவரை இந்த மறியல் இடம்பெறும்.

நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட பட்டதாரிகள் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து விளக்குவதற்காக இன்றுமுதல் மூன்றுதினங்கள் குடாநாட்டில் பல இடங்களில் கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன்-பாலா நேற்றுச் சந்திப்பு

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

லண்டனில் உள்ள அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நேற்றுக் காலை பத்து மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்துகொண்டுள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கை ஜனாதிபதியுடன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலனறுவையில் இளைஞர் கொலை!

மட்டக்களப்பு,ஜூலை31

பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்த பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முத்துக்கல் வாசியான சிவநாயகம் புஸ்பகுமார் (வயது 20) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கைகள், கால்கள், கண்கள் என்பன கட்டப்பட்ட நிலையில் வீதியில் கிடந்த இந்த இளைஞரின் சடலத்தின் அருகே துரோகி என்ற வாசகம் எழுதப்பட்ட அட்டையும் காணப்பட்டது என்று இக்கொலை தொடர்பாக விசாரணை நடத்தும் வெலிகந்த பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-7)

## மினிபஸ்ஸில் நசிந்து இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை31

வயிற்றுப் பகுதியில் மினிபஸ் ஏறியதில் படுகாயமடைந்தார் எனத் தெரிவித்து இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் 'கராஜ்' ஒன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஏ.விஜயகாந்தன் (வயது 24) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இவருக்கு யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (ஜ-6-7-86)

## ஆனைக்கோட்டையில் நேற்று மின் தாக்கி இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூலை31

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் வீடு ஒன்றுக்கு மின் இணைப்பு வழங்கும் வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞன் ஒருவர் மின்சாரம் தாக்கி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இணுவில் மேற்கைச் சேர்ந்த பஞ்சாட்சரம் கஜேந்திரன் (வயது 25) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மின்சாரசபையின் மின் இணைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் பெற்ற ஒருவரின் கீழ் பணிபுரியும் இந்த இளைஞன் மின் விநியோகம் வழங்கிக்கொண்டிருந்த சமயம் மின் விநியோகக் கம்பியை தவறுதலாகக் கையால் பற்றியதால் மின் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இறந்தவரின் சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

(ஜ-3-7-15-139)

## பொலீஸ் கராஜில் குண்டுவெடிப்பு; கான்ஸ்டபிள்கள் இருவர் பலி!

கொழும்பு,ஜூலை31

நாரஹேன்பிட்டியில் உள்ள பொலீஸ் கராஜில் கான்ஸ்டபிள் தற்கொலை செய்துகொண்டதோடு மற்றொரு பெண் கான்ஸ்டபிளையும் பலியெடுத்தார். இதன்போது மூன்றாவது நபர் ஒருவரும் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் மாலை 4 மணிக்கு பொலீஸ் கராஜின் கணனி அறையில் இடம்பெற்றுள்ளது.

காதல் விவகாரமே இக்குண்டு வெடிப்புக்குக் காரணம் என முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மற்றொரு பெண் கான்ஸ்டபிளைத் தாம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் ஒகஸ்ட் இறுதியில் மூன்றுநாள் வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ். குடாநாடு மற்றும் வன்னி ஆகிய இடங்களில் உள்ள சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு சந்தைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கும் வர்த்தகக் கண்காட்சி ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

அடுத்த மாதம் 27 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். மத்திய கல்லூரியில் இக்கண்காட்சி நடைபெறும்.

யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயராஜா இதனைத் தெரிவித்தார்.

குடாநாடு மற்றும் வன்னிப் பகுதியில் உள்ள கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதும் அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தைவாய்ப்புத் தேடுவதுமே இக்கண்காட்சியின் முக்கிய நோக்கம் என அவர் தெரிவித்தார்.

குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிகளில் உள்ள கைத்தொழிலாளர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் இலவசமாக இக்கண்காட்சியில் தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்த முடியும். அத்துடன், இக்கண்காட்சி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு தபாலக வளாகத்தில் கடற்படையினர் புதிய முகாம்

### எதிர்ப்பு நடவடிக்கையில் மக்கள்

நெடுந்தீவு,ஜூலை31

நெடுந்தீவு தபாலக வளாகத்தில் கடற்படையினர் முகாம் அமைப்பதனைத் தடுத்து நிறுத்தக் கோரி அப்பகுதி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்ட யுத்தநிறுத்த காலப் பகுதியில் கடற்படையினர் நெடுந்தீவுப் பகுதியில் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

அந்த முகாமுடன் மேலும் ஒரு புதிய முகாமை நெடுந்தீவு தபாலக வளாகத்தில் அமைப்பதற்கு அனுமதிக்குமாறு கடற்படையினர் வடபிராந்திய தபால்மா அதிபரிடம் கோரியிருந்தனர்.

ஆனால் தபால்மா அதிபரின் அனுமதி கிடைப்பதற்கு முன்னர் புதிய கடற்படை முகாமை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் கடற்படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்படையினரின் இந்த நடவடிக்கையை தடுத்துநிறுத்துமாறு கோரி நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், தேசிய பேரவை மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். போர்நிறுத்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர்கள் ஒப்படைப்பு

கிளிநொச்சியிலுள்ள இடைத்தங்கல் முகாமில் இருந்து 34 சிறுவர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என்று ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெவ்) தெரிவித்துள்ளது.

14 முதல் 17 வயது வரையான 21 யுவதிகளும் 13 இளைஞர்களுமே விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று [illegible] கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து இந்த சிறுவர்களின் எதிர்காலம் குறித்து ஆராய்வதுடன் அவர்களது குடும்பங்களுடன் சேர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் 'யுனிசெவ்' கூறியுள்ளது.

சிறுவர்கள் விடுவிக்கப்பட்டமை வரவேற்கத் தக்கது என்று சர்வதேச சிறுவர் நிதியத் [illegible]கான பேச்சாளர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# களுவாஞ்சிக்குடியில் பட்டதாரிகள் பிரதேச செயலகம் முன் மறியல்

## நியமனம் வழங்குவதாகப் பின்னர் உறுதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை31

களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் அரச நியமனங்களுக்கு விண்ணப்பித்த 388 பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கிய அரசு அவர்களின் பெயர்ப்பட்டியலையும் வெளியிட்டது.

இப்பட்டியலில் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் இருந்து பதவிக்கு விண்ணப்பித்த பட்டதாரிகளின் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை.

இதனால், ஆத்திரமடைந்த களுவாஞ்சிக்குடிப் பிரதேச பட்டதாரிகள் நேற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதனை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் களுவாஞ்சிக்குடிப்பிரதேச செயலகத்திற்குச் சென்று ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்தித்தபின் பிரதேச செயலாளரையும் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகம் பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் தொடர்பான பட்டியலை தாமதமாக அரசுக்கு அனுப்பியுள்ள விவரம் தெரியவந்தது.

இதனால் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினார்.

அவரது விளக்கத்தை ஏற்றுக்கொண்ட அமைச்சர், அடுத்த கட்டமாக மேலும் 18 ஆயிரம் பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அப்போது களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்த 388 பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இந்த உறுதி மொழியை ஏற்றுக்கொண்ட பட்டதாரிகள் போராட்டத்தைக் கைவிட்டனர். (க)

# பாடசாலை நேரத்தில் ரியூசன் நடத்தும் ஆசிரியர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

அச்சுவேலி,ஜூலை31

பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மீது கல்வி அமைச்சு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

பாடசாலை நேரங்களில் பாடசாலைக் கடமையைப் புறந்தள்ளி விட்டு தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மீதும் பாடசாலையில்கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கல்வி பயில்வது தொடர்பாகவும் நடவடிக்கை எடுப்பதற்கு கல்வி அமைச்சுச் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விவரமான சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தார மெல்லினால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நேரத்தில் பாடசாலைககுச் சமுகந்தராமல் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் விவரம் அதிபர்கள் ஊடாக இரகசிய அறிக்கையாக சேகரிக்கப்பட இருப்பதோடு அதன் அடிப்படையில் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், பாடசாலைக்கு சமுகந்தராமல் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் தொடர்பாக விவரங்கள் திரட்டப்படுவதோடு 80 வீதம் பாடசாலைக்குச் சமுகம் தராத மாணவர்களை பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கக்கூடாது எனவும் -

இந்த விடயங்கள் தொடர்பாகக் கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-11)

## பேராதனைப் பல்கலையில் பாதுகாப்பு ஊழியர் மீது சேறு, கூழ்முட்டை வீச்சு!

பேராதனைப் பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது கூழ் முட்டைகளும், அழுகிய பொருள்கள், சேறு என்பனவும் அள்ளி வீசப்பட்டன.

பல்கலைக்கழக சரச்சந்திரா திறந்த கலையரங்கில் நேற்றுமுன்தினம் இரவு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவ்வேளையில் இரு வெவ்வேறு மாணவக் குழுக்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலை சமரசமாகத் தீர்த்து வைக்கப் பாதுகாப்பு ஊழியர்கள் மிகுந்த பிரயத்தனம் எடுத்தனர். இவ்வேளையில் மாணவர்கள் சிலர் கூழ் முட்டைகளையும் சேற்று நீரையும் மற்றும் அசுத்தமான பொருள்களையும் அள்ளி அவர்கள் மீது கொட்டத் தொடங்கினர்.

இவ்வாறு மோசமான அனுபவத்துக்கு உள்ளான பாதுகாப்பு ஊழியர்கள் கடமைகளைப் புறக்கணித்து தொடர்ச்சியான வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். உரிய நடவடிக்கை எடுக்காது போனால் போராட்டம் தொடரும் எனப் பாதுகாப்பு ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## 386 இலங்கையருக்கு அமெ. கிறீன் காட் விஸா

அமெரிக்காவில் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு குடியேறுவதற்கு என்று உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட 'கிறீன்காட்' விஸா சீட்டிழுப்பின்கீழ் இலங்கையர் 386 பேர் அங்கு குடியேறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். ஆண்டுதோறும் நடைபெறும் இந்தச் சீட்டிழுப்பில் இவ்வருடம் தெரிவானவர்களின் பெயர்ப்பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

உலகளாவியரீதியில் ஒருலட்சம் பேர் இந்த விஸா முறையின்கீழ் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

இதற்கென கிடைத்த மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 95 லட்சமாகும். கடந்த 2003ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களே சீட்டிழுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. (ஒ-7)

# சாவகச்சேரி நகரில் இன்று காவடியுடன் பழனிவேல் பவனி

சாவகச்சேரி - டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய ஸ்ரீ பழனிவேல் பவனி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பவனி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி டச்சு வீதி, இராமலிங்கம் வீதி, கண்டி வீதி, தபாற்கந்தோர் வீதி ஊடாக செருக்கல் பிள்ளையார் ஆலயத்தை அடைந்து பின்னர் டச்சு வீதி வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

ஸ்ரீபழனி வேல் பவனியில் கோலாட்டம், செம்பு நடனம், குதிரையாட்டம், கரகாட்டம், தீச்சுடர் விளையாட்டு, காவடியாட்டம் என்பனவும் இடம்பெறும். செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகவும் தென்மராட்சிக் கலாசார அலுவலர் செ.பத்மராணி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்தப் பவனியில் ஆசியுரையினை சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் நிகழ்த்துவார் (எ-31-117-201)

# வவுனியா நலன்புரி நிலையத்தில் சுருக்கிட்ட நிலையில் சடலம் மீட்பு!

வவுனியா, சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வசித்துவந்த நபர் ஒருவர் தூக்கில் இருந்தவாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவரின் சடலம் நேற்றுக் காலை வவுனியா பொதுமருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இவர் கறுப்பையா ஆறுமுகம் (வயது 50) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வவுனியா மாவட்ட மேலதிக நீதிவான் எஸ்.சிற்றம்பலம் சென்று விசாரணை நடத்தினார். இறந்தவர் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது தூக்கில் இடப்பட்டாரா என்பது தொடர்பாகத் தீவிரமான விசாரணையினை தாம் மேற்கொண்டு வருவதாக வவுனியாப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உழவு இயந்திரத்தில் நசிந்து இறந்துள்ளார். (8)

# ஜி.சீ.ஈ. உயர்தர பாடம் கற்பிக்கும் ஆசிரியருக்கு உரிய தகைமை அவசியம்

## கல்வி அமைச்சு அறிவுறுத்து

அச்சுவேலி,ஜூலை31

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பட்டதாரிகளாக அல்லது குறிப்பிட்ட பாடத்தில் பல்கலைக்கழகப் பட்டத்தகைமைக்குக் குறையாத கல்வித் தகைமை கொண்டவர்களாக இருக்கவேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கற்பித்தல் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்த விதிமுறை நடைமுறைப்படுத்தப் படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொருத்தமான ஆசிரியர், ஆளணி இல்லாத நிலையில், பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடத்தெரிவுகளுக்கு சந்தர்ப்பம் அளிப்பதால் உரிய பாடத்தில் உயர்தகைமை இல்லாத ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஜ-11)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை31

சரவணை, தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும்.(10-88-204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31

இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று சனிக்கிழமையும், தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். (10-5)

★ ★ ★

ஏழாலை, சூறாவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

தீர்த்தத் திருவிழாவைத் தொடர்ந்து அண்மையில் லண்டனில் மரணம் அடைந்த செல்வன் ஈஸ்வரலிங்கம் ராகவனின் நினைவாக அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31

சரசாலை தெற்கு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெறவுள்ளது. (10-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வரும் லட்சார்ச்சனையின் இறுதி நாளான இன்று சனிக்கிழமை காலை 8மணி முதல் அம்பாளுக்கு சங்காபிஷேகமும், சகஸ்ரநாம அர்ச்சனையும், பூர்வாகுதியும் இடம்பெறும். மாலை பல இனப் பூக்களால் அர்ச்சனைகள் இடம்பெற்று அம்பாள் வீதி உலாவர எழுந்தருளுவார். (10-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31

அகில இலங்கை திருமுறை மன்றம், சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் நடத்தும் திருமுறைப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 7மணி முதல் சாந்தையர்மடம் கற்பகவிநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31

வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று கொண்டாடப்படவுள்ளதால் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

திருவிழாவிற்கு வருகை தரும் அடியார்கள் அடையாள அட்டையுடன் சேந்தான் குளம் சந்தி ஊடாக ஆலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10-201)

★ ★ ★

சாவகச்சேரி,ஜூலை31

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை காலை 8 மணிக்கும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-31)

★ ★ ★

புத்தளம்,ஜூலை31

புத்தளம் தலவில புனித அன்னம்மாள் தேவாலய வருடாந்த ஆடி மாத உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தேவாலய பங்குத் தந்தை சுனில் விஜயசிங்கா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வைத் தொடர்ந்து தினமும் விசேட ஆராதனைகள் இடம்பெறும்.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி காலை 7 மணிக்கு வேஸ்பர் ஆராதனை இடம்பெறும். மறுநாள் காலை 7 மணிக்கு திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அன்னம்மாளின் திருச்சொரூபம் ஊர்வலமாக எடுத்துவரப்படும் (ஒ-14)

# தனிமையில் இருந்த நீதிபதி மீது பாலியல் பலாத்கார முயற்சி!

## பலப்பிட்டியில் அதிர்ச்சிச் சம்பவம்

கொழும்பு,ஜூலை31

தனிமையில் இருந்த மேல்நீதிமன்றப் பெண் நீதிபதி மீது பாலியல் பலாத்கார முயற்சி இடம்பெற்றது. காரியம் கைகூடாததால் பெண் நீதிபதியைக் காயப்படுத்திவிட்டு காமுகர்கள் தப்பியோடிவிட்டனர்

மேல் நீதிமன்ற நீதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் காவல் கடமையில் இருந்த இரண்டு பொலீஸ்காரர்களும் ஆழ்ந்த நித்திரையில் இருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நீதித்துறைக்கு விடப்பட்ட ஓர் அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் அமைந்துள்ளது.

பாதுகாப்புத்துறையினரின் அசமந்தப்போக்கே இவ்வாறான சம்பவங்களுக்குக் காரணம் என நீதிச்சேவைகள் ஆணைக்குழு பொலீஸார் மீது சீறிப்பாய்கின்றது. இவ்விடயம் தொடர்பாகப் பொலீஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் அது அனுப்பிவைத்துள்ளது.

அதிர்ச்சியூட்டும் இந்தச் சம்பவம் பலப்பிட்டிய மேல்நீதிமன்ற (பெண்) நீதிபதிக்கே ஏற்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனக் கருதப்படும் இருவர் நேற்றுமுன்தினம் அதிகாலை மூன்று மணியளவில் பலப்பிட்டிய மேல்நீதிமன்ற நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வந்துள்ளனர். ஒருவர் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருக்க மற்றவர் நீதிபதியின் படுக்கை அறையுடன் இணைந்துள்ள குளியலறையின் ஜன்னலை உடைத்துக்கொண்டு நீதிபதியின் படுக்கை அறைக்குள் நுழைந்துள்ளார்.

ஆழ்ந்த நித்திரையில் இருந்த நீதிபதியின் மீது பலாத்காரம் மேற்கொள்ள அவர் முயன்றபோது நீதிபதி தன்னைச் சுதாகரித்துக்கொண்டு எழுந்தார். ஆனால், வந்த நபர் கத்தியைக் காட்டி பலாத்காரம் மேற்கொள்ள முயன்றுள்ளார்.

அந்நபருடன் மல்லுக்கட்டி தன்னை விடுவித்துக்கொள்ள நீதிபதி முயன்றபோது, அவரது இடதுபுறக் கண்ணுக்கு அருகில் காயம் ஏற்பட்டுள்ளது. அந்தச் சமயத்தில் நீதிபதி கூச்சலிடவே காவலுக்கு இருந்த பொலீஸார் ஓடிவந்துள்ளனர். இதனால், நீதிபதியின் மேசையில் இருந்த ஆயிரம் ரூபா பணத்தையும், கையடக்கத் தொலைபேசி இருந்த கைப்பையையும் தூக்கிக்கொண்டு அவர்கள் இருவரும் ஓடித் தப்பிவிட்டனர்.

சம்பவ சமயம் நீதிபதியின் வீட்டுவேலைக்காரப் பெண்ணின் அறையும் வெளிப்புக்கமாகப் பூட்டப்பட்டிருந்ததால், அவராலும் நீதிபதிக்கு உதவமுடியாமல் போனது எனக் கூறப்பட்டது.

சந்தேகநபர்களைப் பொலீஸார் விரட்டிச் சென்றபோது அவர்கள் தாம் கொண்டுசென்ற கைப்பையைப் போட்டுவிட்டு ஓடித்தப்பிவிட்டனர்.

தனிமையில் இருந்த பெண் நீதிபதி மீது பலாத்காரம் மேற்கொள்ள முயன்றமை ஒரு பெரிய அதிர்ச்சியூட்டும் செயலாகும். நீதிபதிகளின் இல்லங்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஏற்கனவே பொலீஸ்மா அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனினும், பொலீஸாரால் வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு திருப்திகரமானதாக இல்லை. எனவே, நீதிபதிகளுக்கும் மேலதிக பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜயதிலக பொலீஸ்மா அதிபருக்கு மீண்டும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாகப் பலரை விசாரணைக்குட்படுத்திய பலப்பிட்டிய பொலீஸார் இரண்டு பேரைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

அவர்களுள் ஒருவர் போதைப்பொருள் பாவனை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இப்போது பரவலாகப் பேசப்படும் விடயங்களுள் முக்கியமானது உத்தேச இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய செய்திகள்தாம்.

அண்மையில் புதுடில்லிக்கு இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட விஜயத்தின் பெறுபேறாக 'வெட்டிக்கிழிக்கப்பட்ட' சாதனைகளுள் முக்கியமானதாக இது தென்னிலங்கையில் பிரசாரப்படுத்தப்பட்டது.

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏதோ இந்தா வந்துவிட்டது என்பது போலவும், இந்த ஒப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவத்தின் திறனை எல்லையற்ற உச்சிக்கு உயர்த்தப் போவது போலவும் கூடப் படம் பிடித்துக்காட்டப்பட்டது.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக ஒருசில தினங்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கைப் புதுடில்லியில் சந்தித்து, மனந்திறந்து கலந்தாலோசித்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, வேறுவிதமாகக் கருத்து வெளியிடுகின்றார்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கும், அவர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவில் தார்மீக ஆதரவு அளித்துவரும் முக்கிய தலைவர்களுள் வைகோவும் ஒருவர். தலைவர் வே.பிரபாகரன் மீது தீரா வாஞ்சை கொண்டவர் அவர்.

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாகச் சாத்தியமேயில்லை. ஈழத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அத்தகையதோர் ஒப்பந்தம் ஏறபடாது என்ற சாரப்பட அடித்துக் கூறுகின்றார் அவர்.

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற விடயத்தைப் பற்றி அலட்டிக் கொள்ளவோ அல்லது கவலைப்படவோ இடமில்லை என்றும் திட்டவட்டமாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த உத்தேச ஒப்பந்தம் தொடர்பாக தென்னிலங்கையில் காட்டப்பட்ட 'பூச்சாண்டிக்கு' மாறான விதத்தில் அவரது கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

இந்தியாவில் தற்போது காங்கிரஸ் அரசு பதவியேற்றிருக்கின்றது. ஆனால், நாடாளுமன்றத்தில் அதற்குத் தனித்துப் பெரும்பான்மை இல்லை. கூட்டணிக் கட்சிகளையும் கொண்டிழுத்துக் கொண்டுதான் ஆட்சியை நடத்தவேண்டிய இக்கட்டு அதற்கு. அதனால் கூட்டணிக் கட்சிகளைக் காங்கிரஸ் அரசின் தலைமை சுலபமாகப் பகைத்துக்கொள்ள முடியாது. அவற்றின் தயவை நம்பித்தான் ஆட்சியின் ஆயுள்.

அந்தவகையில் புதிய இந்திய அரசில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. போன்றவையும் குறிப்பிடத்தக்கவை.

இவற்றுள் வைகோவின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகமும், டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும் முற்றும் முழுதாக ஈழவிடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பவை. இது விடயத்தில் தி.மு.க. தற்போது மதில்மேல் பூனையாக இருந்தாலும், ஈழத்தமிழருக்கு எதிரான நிலைப்பாட்டை இந்திய மத்திய அரசு எடுத்தால் அதனைத் தி.மு.க. ஆதரிக்காது என்று நம்பலாம்.

ஆக, இந்தியாவின் புதிய அரசுக்குள் குறிப்பிடத்தக்க சக்திமிக்க தலைவராக வைகோ கருதப்படுவதால் உத்தேச இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாக அவர் கூறும் தகவல்கள் கவனிப்புக்கும், கருத்துக்கும் எடுக்கப்பட வேண்டியவையாகின்றன.

ஆனாலும், வைகோ போன்ற தலைவர்கள் குறித்துப் பொதுவாகத் தெரிவிக்கப்படும் கருத்தையும் நாம் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் வரலாற்றுப் பகைவர்களே இந்திய மத்திய அரசில் மேலாண்மை செலுத்துகின்றார்கள். இந்தியாவில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதன் வெளியுறவுக் கொள்கை வகுப்பில் இந்த அதிகாரக் கும்பலே மேலாதிக்கம் செலுத்துகின்றது.

பாரதிய ஜனதாக் கட்சியோ, காங்கிரஸ் கட்சியோ தமது ஆட்சியை அமைக்க தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகளின் ஆதரவை வேறுவழியின்றிப் பெற்றுக்கொள்கின்றன. ஆனால், இந்த இரண்டு இந்தியத் தேசியக் கட்சிகளும் அமைச்சர் பதவி, அரசு அந்தஸ்து என்ற எலும்புகளை வீசித் திராவிடக் கட்சிகளின் வாயை அடைத்துவிட்டுத் தமது திரைமறைவுத் தமிழ்த் தேசிய விரோத நடவடிக்கைகளை தொடர்கின்றன என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

இந்தத் தமிழ்த் தேசிய எதிர்ப்பின் ஒரு கட்டமே உத்தேச இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்று ஒரு கருத்தும் மிகப் பரவலாக உண்டு.

ஆகவே, ஈழத்தமிழருக்குப் பாதகம் ஏற்படுத்தும் ஒப்பந்தம் ஒன்று இலங்கையில் செய்யப்படமாட்டாது என்ற உறுதிமொழி, இந்திய அரசின் உயர்மட்டத்தில் வைகோ போன்ற உயர்தலைவர்களுக்கு ஒருபுறம் வழங்கப்பட, மறுபுறம் 'சத்தம் சந்தடியின்றி' அதற்கான ஆயத்தங்களும் 'கப்சிப்' என்று நடக்கலாம். அதற்கு வாய்ப்பே இல்லை என்று இப்போதைக்கு உறுதியாகக் கூறிவிட முடியாது.

# திட்டமிடாத வெங்காயச் செய்கையினால் குடாநாட்டு விவசாயிகளுக்கு பாரிய நஷ்டம்

## அவதானத்துடன் செயற்படக் கோருகிறார் போதனாசிரியர்

வலி.தெற்கு,ஜுலை31

திட்டமிடப்படாத வெங்காயச் செய்கையினால் யாழ்ப்பாண விவசாயிகள் தற்போது பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது வெங்காய அறுவடை இடம்பெற்றுவருகிறது.

திட்டமிடப்படாமலும் அளவுக்கதிகமான அசேதனப் பசளைப் பாவனையினாலும் அறுவடை செய்யப்படும் வெங்காயத்தைச் சந்தைப்படுத்தி இலாபம் பெறமுடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

அறுவடை செய்யும் வெங்காயத்தைத் தூக்குகளாகக் கட்டிச் சேமித்து வைக்க முடியாத நிலையிலும் -

உடனடியாக அவற்றைச் சந்தைப் படுத்த வேண்டிய நிலையிலும் -

ஏராளமான வெங்காயத்தைச் சந்தைக்குக் கொண்டுசென்று நஷ்டமடைய வேண்டிய நிர்ப்பந்தநிலையிலும் - விவசாயிகள் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், கொழும்புச் சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் 12 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இது வழமையான சந்தை நிலைவரத்திலும் பார்க்க வீழ்ச்சி எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் வெங்காயத்தை அவசரப்பட்டு அறுவடை செய்யவேண்டாம் எனக் கொழும்பு வர்த்தகர்கள் விவசாயிகளுக்குத் தெரிவித்துள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய காலங்களைப் போல வெங்காயத்தை அறுவடைசெய்த பின்னர் சில காலங்களுக்கு அவற்றைக் கட்டிவைத்துப் பாதுகாக்கக்கூடிய முறையில் தற்போது விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதில்லை.

வெங்காயத்தில் நல்ல விளைச்சலைப் பெறும் நோக்குடன் விவசாயிகள் பலர் அமோனியா, நைதரசன் போன்ற அசேதனப் பசளைகளை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். இதனால், வெங்காயத்தை நீண்டகாலம் பாதுகாப்பாக வைத்திருக்கமுடிவதில்லை. விரைவில் அவை நீர்வற்றிச் சருகடைந்துவிடுகின்றன.

அசேதனப் பசளைப் பிரயோகம் காரணமாக அதன் பக்கவிளைவுகளாக நிலத் தடி நீர் மாசடைகின்றது. மண் நிலம் பழுதடைகின்றது. இரசாயன பசளைக் கொள வனவினால் பணமும் விரயமாகின்றது.

விவசாயிகள் இதுவிடயத்தில் தூர நோக்குடன் செயற்படவேண்டும் எனவும் - இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திட்டமிட்டு வெங்காயச் செய்கையில் ஈடுபடவேண்டும் என்றும் - அதன் மூலமே விவசாயிகள் நஷ்டமடைவதில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும் என்றும் -

உடுவில் பிரதேச விவசாய போதனாசிரியர் ச.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

(எ-152)

# உரவகைகளின் விற்பனை விலை நிதித்துறையினால் நிர்ணயிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை31

உரங்களின் ஆகக் கூடுதல் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும்-

இந்த விலையைவிடக் கூடுதலான விலையில் உரவகைகளை விற்பனை செய்யவேண்டாம் என்றும் -

விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளது.

இதுவிடயமாக, மேற்படி விலைக் காட்டுப்பாட்டுப் பகுதி, பசளையின் பெயர் (உரம்), உற்பத்தி நிறுவனத்தின் பெயர், வன்னி விற்பனை விலை, யாழ். விற்பனை விலை என்ற பகுதிகளை உள்ளடக்கியதாக "வேளாண இடுபொருள் வாணிபர்களின் கவனத்திற்கு" என்ற தலைப்பில் அட்டவணை ஒன்றையும் விடுத்துள்ளது.

அட்டவணை வருமாறு:-

### உரங்களின் விலை விவரம்

| பசளையின் பெயர் | உற்பத்தி நிறுவனத்தின் பெயர் | வன்னி விற்பனை விலை | யாழ். விற்பனை விலை |
|---|---|---|---|
| யூரியா (50 கிலோ) | ஈ.ரீ.ஏ. லங்கா | 585.00 | 600.00 |
| | சீ.ஐ.சீ. | 575.00 | 595.00 |
| | லக்போற | 550.00 | 570.00 |
| | பவர் | 585.00 | 605.00 |
| அமோனியா (50 கிலோ) | ஈ.ரீ.ஏ. லங்கா | 1,145.00 | 1,160.00 |
| | சீ.ஐ.சீ. | 1,140.00 | 1,160.00 |
| | லக்போற | 895.00 | 910.00 |
| | பவர் | 1,170.00 | 1,185.00 |
| ரீ.எஸ்.பி. (50 கிலோ) | ஈ.ரீ.ஏ. லங்கா | 1,470.00 | 1,485.00 |
| | சீ.ஐ.சீ. | 1,495.00 | 1,515.00 |
| | லக்போற | 1,195.00 | 1,210.00 |
| | பவர் | 1,520.00 | 1,540.00 |
| எம்.ஓ.பி. (50 கிலோ) | ஈ.ரீ.ஏ. லங்கா | 1,405.00 | 1,420.00 |
| | சீ.ஐ.சீ. | 1,405.00 | 1,420.00 |
| | லக்போற | 1,155.00 | 1,170.00 |
| | பவர் | 1,430.00 | 1,450.00 |
| வீ 1 (50 கிலோ) | ஈ.ரீ.ஏ. லங்கா | 1,170.00 | 1,190.00 |
| | சீ.ஐ.சீ. | 1,180.00 | 1,200.00 |
| | லக்போற | 1,115.00 | 1,130.00 |
| | பவர் | 1,180.00 | 1,200.00 |
| ரீ.டி.எம். (50 கிலோ) | ஈ.ரீ.ஏ. லங்கா | 875.00 | 890.00 |
| | சீ.ஐ.சீ. | 910.00 | 925.00 |
| | லக்போற | 800.00 | 815.00 |
| | பவர் | 905.00 | 920.00 |

# வகுப்புப் பகிஷ்கரிப்பு தொடருமென அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை31

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு உரிய தீர்வு காணும்வரை தமது வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என அலகின் மாணவர் ஒன்றியத் தலைவர் வே.முருகதாஸ் தெரிவித்தார்.

தமது கற்கை நெறிக் காலத்தினை மேலும் ஒரு வருட காலத்தினால் நீடிக்குமாறுகோரி கடந்த 20ஆம் திகதி முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருவதாகவும் -

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மூதவைக் கூட்டத்திலும் தமது கோரிக்கைக்குச் சாதகமான பதில் எட்டப்படவில்லை என்றும் - இதனை அடுத்தே தாம் வகுப்புப் பகிஷ்கரிப்பைத் தொடருவதெனத் தீமானித்துள்ளதாகவும் - ஒன்றியத் தலைவர் தெரிவித்தார்.

(எ-6)

# ஆங்கிலப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை31

பிரிட்டிஷ் கவுன்சிலினால் சுமார் 20 வருடங்களின் பின்னர் யாழ். மாவட்டத்தில் "சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

பிரிட்டிஷ் பிசினஸ் பாடசாலையுடன் கவுன்ஸில் இணைந்து நடத்தவுள்ள இப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பொதுநூலகத்தில் ஆரம்பமாகி மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

பிரிட்டிஷ் பிசினஸ் பாடசாலையில் இலவச அனுமதி அட்டையைப் பெற்றுக் கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

(10)

### நாளை

ஆடி 17
ஞாயிற்றுக்கிழமை
(01.08.2004)
திதி : பிரதமை
முன்னிரவு 10.33 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
பிற்பகல் 3.25 வரை.
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : [illegible]
(பழைய நேரப்படி)

# பஸ் சேவை விரைவில் விஸ்தரிப்பு

வடமராட்சி,ஜுலை31

பருத்தித்துறை - முகமாலை இடையில் நடைபெற்றுவரும் பஸ்சேவை உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறைப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

தினமும் அதிகாலை 5 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து முகமாலைக்குப் புறப்படும் பஸ் அல்வாய், வதிரி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, அல்வாய் ஊடாக மீண்டும் பருத்தித்துறையை வந்தடைந்து அங்கிருந்து முகமாலைக்குப் புறப்பட்டுச்செல்லும்.

அதேபோல் முகமாலையிலிருந்து தினமும் மாலை 5.30 மணிக்கு பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் கடைசி பஸ் பருத்தித்துறையை வந்தடைந்ததும் பின்னர் அங்கிருந்து அல்வாய், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு உடுப்பிட்டி, வதிரி அல்வாய் ஊடாக மீண்டும் பருத்தித்துறையை வந்தடையும்.

குடாநாட்டுக்கு வெளியேசெல்லும் வடமராட்சி மேற்குப் பகுதி மக்களின் வசதி கருதி இச்சேவை நீடிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-173)

## காசாளர் படுகொலையைக் கண்டித்து

# யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வங்கி ஊழியர் புதன்கிழமை கறுப்புப்பட்டியுடன் பணிபுரிவர்

யாழ்ப்பாணம்,ஜுலை31

மக்கள் வங்கியின் மானிப்பாய்க் கிளையின் காசாளர் சுந்தரம் பஞ்சலிங்கம் (வயது 54) கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துக் குடாநாட்டில் உள்ள வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை கறுப்புப்பட்டி அணிந்து தமது பணிகளில் ஈடுபடவுள்ளனர். -

நாளைமறுதினம் திங்கட்கிழமை கறுப்புப்பட்டி அணிந்து தமது பணிகளில் ஈடுபடவுள்ளதாக முன்னர் முடிவாகி இருந்த போதிலும் -

இலங்கை வங்கியின் 65ஆவது ஆண்டு நிறைவையொட்டி வங்கியின் யாழ்ப்பாணம் மேற்றரக்கிளையில் அன்றையதினம் விழாவொன்று நடைபெறவுள்ளதால், கறுப்புப்பட்டி அணிந்து பணிகளில் ஈடுபடும் கண்டனச் செயற்பாடு புதன்கிழமை மாற்றப்பட்டுள்ளதாக மக்கள் வங்கி உதவிப் பொதுமுகாமையாளர் து.ரகு தெரிவித்தார்.

வங்கி ஊழியர்கள் அனைவரையும் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை முழு நேரமும் கறுப்புப்பட்டி அணிந்து பணியில் ஈடுபடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(10)

### உதயவாக்கு

நம்பியவனை விலக்கிவிடாதே.
விலக்கிவிட்டவனை நம்பாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளியை முந்த முயலும் வோனின் கனவு பலிக்குமா?

ஆசியக் கிண்ணத்திற்கான இறுதிப்போட்டி இன்று நடைபெறுகின்றது. இன்றைய இறுதிப் போட்டியில் சிறிலங்கா மற்றும் இந்திய அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டித் தொடருக்கு முன்னர் சிறிலங்கா அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இரண்டு போட்டிகளைக் கொண்ட 'டெஸ்ட்' தொடரில் பங்குபற்றியது. முடிவில் அந்தத் தொடரை ஆஸ்திரேலியா கைபற்றியது. இந்தப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் கிரிக்கெட் உலகில் முரளிதரன் பற்றியே எங்கும் பேச்சுக்கள் அடிபட்டன.

முரளிதரன் ஆஸ்திரேலியாவுக்குப் போவாரா? இல்லையா? என இந்நாட்டு ரசிகர்கள் அக்கறை கொண்டனர். இதேபோன்ற அக்கறையை ஆஸ்திரேலியர்களும் கொண்டிருந்தனர். முரளிதரன் எங்கள் நாட்டிற்கு (ஆஸ்திரேலியாவுக்கு) வருவாரா? இல்லையா என்பதே அவர்களது அக்கறையாகும். இருப்பினும் முரளி இறுதி முடிவை மேற்கொண்டார். அதாவது, ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதில்லை என முடிவெடுத்தார். இந்நாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் முரளியின் முடிவை அனுமதித்தது.

அதன் பின்னர் கிரிக்கெட் ரசிகர்களிடையே



புதிய கேள்வி ஒன்று எழுந்தது. அதாவது முரளியின் உலக சாதனையை வோன் முறியடிப்பாரா? இல்லையா? என்பதே அதுவாகும். ஆஸ்திரேலியா - சிறிலங்கா இடையேயான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இந்த வினாவுடனேயே ஆரம்பமானது. முரளி ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவில்லை என்ற பிரச்சினையை விட முரளியின் உலக சாதனையை வோன் முறியடிப்பாரா? என்ற வினாவே கிரிக்கெட் ரசிகர்களை ஆட்கொண்டது. ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதில்லை என முரளி முடிவெடுத்த நாள் தொடக்கம் - கடந்த 13 ஆம் திகதி வரை அதாவது ஆஸ்திரேலியாவுடனான 2 ஆவது டெஸ்ட் முடியும்வரை - இந்த விடயம் குறித்தே கிரிக்கெட் ரசிகர்கள் அக்கறை கொண்டிருந்தனர்.

முதலாவது 'டெஸ்ட்' ஆரம்பிப்பதற்கு முன்னர் 527 விக்கெட்டுக்களை வீழ்த்தி முரளி சாதனை படைத்திருந்தார். அவ்வேளையில் வோன் முரளியைவிட 10 விக்கெட்டுக்கள் குறைவாக வீழ்த்தியிருந்தார் (517 விக்கெட்டுகள்). எனவே, ஆஸ்திரேலிய - சிறிலங்கா டெஸ்ட் தொடரில் விக்கெட்டுக்களை வீழ்த்துவதில் முரளிக்கும் வோனுக்கும் போட்டி இடம்பெறவில்லை. முரளியின் சாதனையை முறியடிப்பதற்காக வோன் மாத்திரம் களத்தில் போராடிக்கொண்டிருந்தார்.

"இது உனக்குத் தரப்பட்ட கடைசித் சந்தர்ப்பம். முடிந்தால் முயன்றுபார்" என முரளி கூறவில்லை. இருப்பினும், முரளி ஆஸ்திரேலியா செல்லாத நிலையில் அதில் பொதிந்துள்ள அர்த்தம் அதுவாகவும் இருக்கலாம் அல்லவா?

முதலாவது டெஸ்ட் போட்டியில் வோன் சிறிலங்கா அணியின் பின்வரிசை ஆட்டக்காரர்களான லசித் மாலிங்க, சமிந்தவாஸ் மற்றும் உப்புல் சந்தான ஆகியோரின் விக்கெட்டுக்களை வீழ்த்தி தனது எண்ணிக்கையை 520 ஆக்கினார். அதுவரை 519 விக்கெட்டுக்களை வீழ்த்தி 2 ஆவது நிலையில் இருந்த கொட்னி வோல்ஷின் சாதனை வோனால் முறியடிக்கப்பட்டது.

### ரசிகர்களின் எதிர்பார்ப்பு

முரளியின் சாதனையை வோன் முறியடிப்பாரா எனப் பலரும் வினாவெழுப்பினர். ஆஸ்திரேலியா நாட்டின் அனைத்து வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிச் சேவைகள் அனைத்தும் வோன் சாதனையை முறியடிப்பார் என்றவாறே ஒலி, ஒளி பரப்புக்களை மேற்கொண்டன. அந்நாட்டு மக்களும் முரளியின் சாதனை முறியடிக்கப்படும் என ஆவலோடு காத்திருந்தனர்.

சிறிலங்கா அணி தனது 2 ஆவது இன்னிங்ஸைத் தொடர்ந்த போது வோன் மேலும் சில விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வோன் 19 ஓவர்களை வீசி 61 ஓட்டங்களைக் கொடுத்த போதிலும் விக்கெட்டுக்கள் எவற்றையும் அவரால் வீழ்த்தமுடியவில்லை. ஆகக் குறைந்தது சிறிலங்கா அணியின் பின்வரிசை ஆட்டக்காரர்களில் ஒருவரைக்கூட அவரால் வீழ்த்த முடியவில்லை. முதலாவது டெஸ்ட் முடிவடைந்த போது 3 விக்கெட்டுக்களை மாத்திரம் வீழ்த்திய வோன், தனது மொத்த எண்ணிக்கையை 520 ஆக்கிக்கொண்டார்.

இரண்டாவது 'டெஸ்ட்' ஆஸ்திரேலியாவின் கெயான்ஸ் நகரில் ஆரம்பமானபோது 111 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய வோன் 520 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். 90 போட்டிகளில் 527 விக்கெட்டுக்களை வீழ்த்திய முரளியின் சாதனையை முறியடிக்க வோன் குறைந்தது 8 விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டியிருந்தது.

இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில சங்ககாரா, டில்சான் மற்றும் உப்புல் சந்தன ஆகியோரின் விக்கெட்டுக்களை வீழ்த்திய வோன் தனது மொத்த எண்ணிக்கையை 523 ஆக ஆக்கிக்கொண்டார். அப்போது முரளியின சாதனையை சமமாக்க 4 விக்கெட்டுகளையும் முரளியின் சாதனையை முறியடிக்க 5 விக்கெட்டுக்களையும் வோன் வீழ்த்தவேண்டியிருந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் சிறிலங்கா அணி 85 ஓவர்களில் 385 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. அதாவது, அந்தத் தொடரில் முரளியின் சாதனையை வோன் முறியடிப்பதாயின் சிறிலங்கா அணியின் 10 விக்கெட்டுக்களில் சரியரைவாசியை (5 விக்கெட்டுகள்) வோன் வீழ்த்தவேண்டும்.

அண்மையில் சிறிலங்காவுக்கு ஆஸ்திரேலிய அணி விஜயம் செய்தபோது 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய வோன் மொத்தமாக 26 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இந்தத் தொடரில் சிறிலங்கா அணி துடுப்பெடுத்தாடிய 6 இன்னிங்ஸ்களில் 4 இல் வோன் தலா 5 விக்கெட்டுகள் வீதம் வீழ்த்தியிருந்தார். அந்தத் தொடர் முடிவடைந்தபோது வோன் சிறிலங்காவுக்கு எதிராகப் 11 போட்டிகளில் விளையாடி மொத்தமாக 49 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.




மீண்டும் நாம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின் 2 ஆவது டெஸ்டின் 2 ஆவது இன்னிங்ஸிற்கு வருவோம். அந்த இன்னிங்ஸில் வோன் குறைந்தது 5 விக்கெட்டுக்களை வீழ்த்துவதற்கான வியூகங்கள் வகுக்கப்பட்டன. 2 ஆவது இன்னிங்ஸை சிறிலங்கா அணி ஆரம்பித்து சற்றுநேரத்துக்குள்ளேயே (12 ஓவரில்) ஆஸ்திரேலிய அணித்தலைவர் றிக்கி பொன்டிங் பந்து வீச வோனை அழைத்தார்.

**தொகுப்பு: கஜனி**

வோன் தனது முதலாவது ஓவிலேயே சனத ஜெயசூரியாவின் விக்கெட்டை வீழ்த்தினார். (524 ஆவது விக்கெட்) அதைத் தொடர்ந்து 6 ஆவது, 7ஆவது, 8 ஆவது விக்கெட்டுகள் வோனால் வீழ்த்தப்பட்டன. அந்நிலையில், முரளியின் சாதனை வோனால் சமன்படுத்தப்பட்டது. அதேநேரம் இன்னும் 9 ஓவர்கள் வீசப்படவிருந்தன. சிறிலங்கா அணியின் 9ஆவது துடுப்பாட்ட வீரர் சமிந்தவாஸ் மற்றும் 1C ஆவது துடுப்பாட்ட வீரர் நுவன்சொயிசா ஆகியோர் ஆடிக கொண்டிருந்தனர்.

இந்த 9 ஓவர்கள் முடிவடையும் முன்னர் இந்த இருவரில் ஒருவரின் விக்கெட்டாவது வோனால வீழ்த்தப்படும் - அப்போது முரளியின சாதனை வோனால் முறியடிக்கப்படும் - என ஆஸ்திரேலிய அணி வீரர்கள், ஆஸ்திரேலிய மக்கள் அனைவரும் காத்திருந்தனர். இதற்கு முன்னர் சமிந்த வாஸின் விக்கெட்டை வோன் 6 தடவைகள் கைப்பற்றியிருந்தார். மைதானத்தில் கூடியிருந்த ரசிகர்கள் வோனை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் என்ன ஏமாற்றம்.

இரண்டாவது இன்னிங்ஸில் தொடர்ந்து 37 ஓவர்களை வோன் வீசியபோதும் அவரும் ஆஸ்திரேலிய மக்களும் நினைத்ததைச் சாதிக்க முடியவில்லை. அன்று மைதானத்தில் முரளியின் பெருமையை சமிந்த வாசும் நுவன் சொயிசாவும் காப்பாற்றினர். தொடரில் சிறிலங்கா அணி தோல்வியடைந்த போதிலும் முரளி இல்லாத விடத்திலும் முரளியின் பெருமையைக் காப்பாற்றிவிட்டது.

முரளியின் சாதனை சமனாக்கப்பட்டது. முரளியின் சாதனையை முறியடிக்க வோனுக்குக் கிடைத்த இறுதிச்சந்தர்ப்பம் என இதைக் கூறலாம். சிறிலங்கா அணி தென் ஆபிரிக்கா, நியூஸிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுடன் தொடர்ந்து போட்டிகளில் விளையாடவுள்ளது. ஆனால், ஆஸ்திரேலிய அணி எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இந்தியாவுடன் விளையாடவுள்ளது. அவ்வேளையில், (ஒக்ரோபா மாதத்தில்) முரளி இன்னும் பல விக்கெட்டுக்களை வீழ்த்தி அதிக தூரத்திற்குச் செல்ல வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. சிறிலங்கா மற்றும் தென் ஆபிரிக்க தொடர் ஆரம்பிக்கும் வரை மாத்திரமே முரளியின் சாதனையைச் சமப்படுத்திய பெருமைக்குரியவராக வோன் விளங்குவார். ✪

## இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெறாமல் கௌரவமாக வெளியேறியது பாகிஸ்தான்

கொழும்பு,ஜூலை31

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் லீக் ஆட்டங்களின் இறுதியாட்டத்தில் பங்களாதேஷ் அணியை 6 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் அணி வெற்றியீட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு ஹெறத்தாராம மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் காலித் மசூத் 54 ஓட்டங்களையும் ரரினசலா 23 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆரம்பத்தில் 42 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தபோதும், பின்வரிசை வீரர்கள் ஓரளவு தாக்குப்பிடித்து ஆடியதால் பங்களாதேஷ் அணியினால் 166 ஓட்டங்களைப் பெறமுடிந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணியின் சார்பில் சபீர் அகமட் 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் முகமட்சமி, சொகைப் அக்தர், அப்துல்ரசாக் ஆகியோர் தலா 2 விக்கெட் டுக்களையும் கைப்பற்றினர்.

167 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியீட்டியது. சொகைப் மாலிக் 48 ஓட்டங்களையும் யுசுப்யுகானி 39 ஓட்டங்களையும் இம்ரான் நஸீர் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் சொகைப் மாலிக் தெரிவானார்.

இநதத் தொடரில் பாகிஸ்தான் அணி ஐந்து ஆட்டங்களில் கலந்துகொண்டபோதும் இலங்கை அணியுடனான ஓர் ஆட்டத்தில் மட்டுமே தோல்வியுற்றது. ஆனால், இந்திய அணி பாகிஸ்தான் அணியுடன் ஓர் ஆட்டத்திலும் இலங்கை அணியுடன் ஓர் ஆட்டத்திலும் தோல்வியுற்றிருந்தது. ஆயினும், 'போனஸ்' புள்ளி முறையின் காரணமாக இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது இந்திய அணி. இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெறாமல கௌரவமாக வெளியேறியது பாகிஸ்தான் அணி. (10)


## பெண்களுக்கான கடலக தொழில்நுட்பவியல் பயிற்சி - 2004

மேற்படி பயிற்சி நெறியைப் பயில விரும்புபவர்கள் பூர்த்திசெய்யப்பட்ட சுயவிவரங்களடங்கிய விண்ணப்பப்படிவத்தை 06-08-2004 ஆம் திகதிக்கு முன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

வயது எல்லை: 18-35

பயிற்சிக் காலம்: மூன்று மாதங்கள்

இல: 372, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 2226251 (34755)

அதிபர்,
கடற்றொழில் மற்றும்
கடலோட்டு எந்திரவியல் கல்லூரி.

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்குச் சமீபமாக நாவலர் வீதியில் ஐந்து (05) அறைகள் கொண்ட விசாலமான வீடு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல: 2227109 காலை 8.30 மணிக்கு முன்னும் மாலை 6.00 மணிக்குப் பின்பும். (34752)

## முகமாலைக்கு கடுகதி பஸ் சேவை

'பயணிகளின் நலன்கருதி 02.08.2004 தொடக்கம் காலை 6.30 மணிமுதல் தெல்லிப்பழையிலிருந்து முகமாலைக்கு கடுகதி சேவைகள் சிற்றூர்திகளினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தச் சேவையானது - தெல்லிப்பழையிலிருந்து ஆரம்பமாகி சுன்னாகம், மட்டுவில், புத்தூர் சந்தியூடாக முகமாலையைச் சென்றடைந்து திரும்பவும் அதே பாதையால் தெல்லிப்பழையை வந்தடையும்.

மிகவிரைவில் காரைநகர், மாதகல் ஆகிய இடங்களில் இருந்தும் முகமாலைக்கான கடுகதிசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

50/1, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்
(34751)(29-11-17) சங்கங்களின் தலைமைச் செயலகம்.


## மரண அறிவித்தல்

### திருமதி யோகலிங்கம் சிவபாக்கியம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகலிங்கம் சிவபாக்கியம் 28.07.2004 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலேசியன பென்சனியர் இளையதம்பி - சரஸ்வதி ஆகியோரின் மூத்த அன்பு மகளும் யோகலிங்கம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையா -முத்துப்பிள்ளை அவர்களின் மருமகளும் பரமசிவம் (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி), புவனேஸ்வரி சோமாஸ்கந்தராசா, செல்வராசா (கனடா), இராஜேஸ்வரி கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கனகரட்ணம் (வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை), இராதாகிருஷ்ணன் (பணிப்பாளர், றோட் என்ஜினியரிங் பிறைவேற் லிமிட்டெட்), பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோமாஸ்கந்தராசா (ஓய்வுபெற்ற F.O), கந்தசாமி (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற பதிவாளர்), செல்வதி, நாகேஸ்வரி, தவனேஸ்வரி, கமலாவதி, நளாயினி, திருமதி குமாரசாமி செல்லமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர், சாவகச்சேரி நகரசபை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவகாந்தி (ஜேர்மனி), சிவசீலன் (கனடா), சிவச்செல்வி (நியூஸிலாந்து), மனோகரன் (கனடா), சிவராணி (கனடா), சிவகரன் (டென்மார்க்), சிவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயகுமார் (ஜேர்மனி), சசீந்தினி (கனடா), இரவிகரன் (நியூஸிலாந்து), சாரத்லதா (கனடா), குலசிங்கம்(கனடா), யோகமலர் (டென்மார்க்), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் பிரகாஷ், சதீஸ், துவாரகா, கோகுல், கனிஸ்யா, அனிஸ்யா, லேனுஸ்யா, மதுரா, மோகிதன், திலக்ஷன், பிருந்தா, நிருஷன், கிரிஷான், மதுஷான், மீனுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.* (34747)(29-11-16)

தகவல்:
சு.யோகலிங்கம் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கைவிட்டு வெளியேறும் கெடு முடிந்தது; ஜரோப்பிய நாடுகள் மீது போர் தொடுப்போம்

## அல்கெய்டா தீவிரவாதிகள் மிரட்டல்



டுபாய்,ஜுலை31

ஈராக்கில் இருந்து வெளியேறுவதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு கொடுககப்பட்ட காலக் கெடு முடிந்துவிட்டது. எனவே அவற்றின் மீது போர் தொடுப்போம் என்று அல்கெய்டா மிரட்டி உள்ளது.

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்துக்கு உறுதுணையாக இருப்பதற்காகப் பல நாடுகளும் தங்கள் இராணுவத்தை அந்த நாட்டுக்கு அனுப்பியுள்ளன. இப்படி ஈராக் சென்றிருக்கும் இராணுவ வீரர்களில் ஐரோப்பியர்களும் அதிகளவில் இருக்கிறார்கள்.

ஸ்பெயின் நாட்டில் ரயில்களில் நடந்த தாக்குதல்களை தொடர்ந்து அந்த நாடு தன் இராணுவத்தை திரும்பப்பெற்றது, அதை யொட்டி, அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின் லேடன் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

அதில் ஐரோப்பிய நாடுகள் தங்கள் இராணுவத்தை ஒரு மாதத்துக்குள் ஈராக்கிலிருந்து திரும்பப் பெறவேண்டும் என்று கெடு விதித்தார். இந்த ஒரு மாதகாலம் வரை ஐரோப்பிய நாடுகளில் தாக்குதல் நடத்தமாட்டோம் என்று போர் நிறுத்தமும் செய்திருந்தார்.

இந்த நிலையில், கெடு முடிந்துவிட்டது. ஐரோப்பிய நாடுகள் மீது போர் தொடங்கப்படும் என்று அல்கெய்டா அறிவித்துள்ளது.

இஸ்லாமிய இணையத்தளத்தில் இடம் பெற்றுள்ள ஓர் அறிக்கையில், அபுஹப்ஸ் அல் மஸரி பிரிகேட் என்னும் ஐரோப்பாவுக்கான அல்கெய்டா அமைப்புக் கூறி இருப்பதாவது:-

பின்லேடன் அறிவித்த கெடு முடிந்துவிட்டது. ஐரோப்பிய நாடுகள் மீது போர் தொடங்கப்படும் என்று நாங்கள் பிரகடனம் செய்கிறோம். சரியான பாதைக்குத் திரும்பும்வரை உங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள்) எதிரான தாக்குதலை நிறுத்தமாட்டோம்.

- என்றுள்ளது. (8)

## முன்னாள் இந்திய அழகி நஃபிசா ஜோசப் தற்கொலை



1997 இல் 'மிஸ் இந்தியா' பட்டம் பெற்ற கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த நஃபிசா ஜோசப் மும்பையிலுள்ள அவரது இல்லத்தில் தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு வயது 25.

மும்பை வெர்ஸோவாவிலுள்ள நஃபிசாவின் இல்லத்தில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது. பின்னர் பிரேத பரிசோதனைக்காக உடல் மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

1997 இல் 'மிஸ் இந்தியா' பட்டம் வென்ற நஃபிசா, தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பணியாற்றிவந்தார். பிராணிகளின் நலனுக்காகவும் பாடுபட்டுவந்தார்.

இவ்வருட இறுதியில் தொழிலதிபர் கௌதமை நஃபிசா திருமணம் செய்யஇருந்தார்.(8)

## அல்கெய்டா தீவிரவாதி பாகிஸ்தானில் கைது



கென்யா மற்றும் தான்சானியா நாடுகளிலுள்ள அமெரிக்க தூதரகங்கள் 1998 ஆம் ஆண்டு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. இந்த குண்டு வெடிப்புக்கு தான்சானியா நாட்டைச் சேர்ந்த அல்கெய்டா இயக்கத் தீவிர வாதி அகமது ஹால் பான் கெய்லானி என்பதை அமெரிக்க உளவுப்பிரிவு நிறுவனம் கண்டுபிடிததது. இவர் தலைக்கு 50 கோடி ரூபா பரிசு தருவதாகவும் அறிவித்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள குஜ்ராத் நகரில் அல்கெய்டா தீவிரவாதி அகமது தங்கி இருப்பதை அறிந்து பாகிஸ்தான் இராணுவத்தினர் முற்றுகையிட்டனர். இரு தரப்பினருக்கும் 12 மணிநேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இறுதியில் அகமது, அவரது மனைவி உட்பட 15 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அகமதுவிடம் நடத்திய விசாரணையில் அமெரிக்கத் தூதரகங்களைக் குண்டு வைத்துத் தகர்த்ததையும் இதில் 12 அமெரிக்கர்கள் உட்பட 219 பேர் கொல்லப்பட்டதையும் ஒப்புக் கொண்டார். அவரிடம் விசாரணை முடித்த பிறகு அமெரிக்காவிடம் அவர் ஒப்படைக்கப் படுவார் என்று பாகிஸ்தான் இடைக்கால அமைச்சர் பைசல் தெரிவித்தார். (8)

# பணயக் கைதிகளைக் கொலை செய்தமை இஸ்லாம் மதத்துக்கு இழைத்த குற்றம்!

## பாகிஸ்தான் கடும் கண்டனம்

இஸ்லாமாபாத்,ஜுலை31

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்டு பணயக் கைதிகளாக இருந்த இரு பாகிஸ்தான் பிரஜைகள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இதனை அல் ஜெசீரா தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

இக்கொலைக்கு பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தப்படுகொலைகள் மூலமாக கடத்தல்காரர்கள் மனித குலத்துக்கும் இஸ்லாத்துக்கும் எதிராக பெரும் குற்றமிழைத்துள்ளார்கள் என பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அஸாத் ஹுஸைன் கான், சஜாட் நியீம் என்னும் இரு பாகிஸ்தானியரே ஈராக்கில் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு கொலைசெயயப்பட்டவர்களாவர். ஈராக்கிலுள்ள குவைத் நிறுவனமொன்றில் பணியாற்றி வந்த இவ்விருவரில் ஒருவர் பொறியியலாளர். மற்றவர் சாரதி. இவர்களை வேலைக்கமர்த்திய குவைத் நிறுவனத்தினர் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டுமென கடத்தல்காரர்கள் நிபந்தனை விதித்திருந்தார்கள்.

அவ்வாறு ஈராக்கை விட்டு வெளியேறாவிட்டால் பணயக்கைதிகளான இந்த இரு பாகிஸ்தானியரும் கொலை செய்யப்படுவரென்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். கொலையுண்ட இவ்விரு பாகிஸ்தானியரின் உடலகளை அராபிய அல்ஜெசீரா தொலைக் காட்சி வீடியோ நாடா ஒன்றின் வாயிலாக ஒளிபரப்பியது. இஸ்லாமிக் இராணுவம் என்ற ஓர் அமைப்பால் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு இந்நாடா அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இவ்விருவரும் எத்தகைய குற்றமும் செய்யவில்லை. இவர்களைக் கொலைசெய்யவேண்டாம். விடுதலை செய்யுங்கள் என கடந்த செவ்வாய்க் கிழமை பாகிஸ்தான் ஈராக்கிலுள்ள இஸ்லாமிக் இராணுவத்துக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. இவர்கள் அமெரிக்கப் படைகளுக்காகப் பணிபுரியவில்லை. அவ்வாறு செய்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை மறுக்கின்றோம். அதே வேளை ஈராக்கிற்குப் படைகளை அனுப்ப பாகிஸ்தான் முன்வரவில்லை என்றும் அறிவிததிருந்தது. எனினும் இவ்வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுவிட்டது. (8)



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள மிருகக்காட்சிச்சாலையில் பார்வையாளர்களைக் கவர்வதற்காக உராங்குட்டான் மனிதக் குரங்குகளின் குத்துச்சண்டைப் போட்டி நடைபெற்றுவருகின்றது அதில் ஒரு காட்சிதான் இது.

# சூடானில் கிராமவாசிகளை உயிரோடு தீ மூட்டிய தீவிரவாதிகள்!

நைரோபி,ஜுலை31

சூடானிய தர்பார் பிராந்தியத்தில், அரேபியத் தீவிரவாதிகள், கிராமவாசிகளைப் பிடித்து, விலங்கிட்டு உயிரோடு எரித்துக் கொன்றுள்ளனர்.

தர்பார் அசம்பாவிதங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி உண்மைகளைக் கண்டறிவதற்கான குழு, தனது விசாரணை அறிக்கையில் இதை வெளிப்படுத்தியுள்ளது.

சூடானிய இரு தீவிரவாதக் குழுக்களுக்கிடையே ஏப்ரல் 8ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட முத்தரப்பு போர் நிறுத்த உடன்படிக்கையை மீறிய செயல் என்றும் இதனை இக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜுலை 11ஆம் திகதி சூடானில் உண்மை நிலையைக் கண்டறிவதற்கான விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல்கள் தொடர்பாக இதனிடம் மூன்று முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதையடுத்து இக்குழு ஜுலை3ஆம் திகதி தாக்குதலுக்குள்ளான தர்பேரிவன் கிராமத்திற்குச் சென்று விசாரணையை மேற்கொண்டது. ஜன்ஜவீட் என்னும் அரேபியத் தீவிரவாதக் குழுவே தாக்குதலை நடத்தியதாக அங்கு இக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடத்தியோர் அப்பாவிகளான கிராமவாசிகளைக் கொன்றுள்ளனர். பலரைக் கைகளையும், கால்களையும் சங்கிலிகளால் கட்டி, உயிரோடு தீமூட்டி எரித்திருக்கிறார்கள் என இக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (8)

## உலக அரங்கில்

# நீதிமன்றத்தில் முகத்திரையை அகற்ற மறுத்த பெண்கள்

வெலிங்டன்,ஜுலை31

நியூசிலாந்து நாட்டில் ஆக்லாந்து நீதிமன்றில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 2 பெண்கள் ஒரு கிரிமினல் வழக்கில் சாட்சி சொல்வதறகாக அழைக்கப்பட்டனர்.

அவர்கள் பர்தா அணிந்துகொண்டு நீதிமன்றில் சாட்சி சொன்னார்கள். அவர்கள் சொலவது உண்மையா, பொய்யா என்பதை முகத்தைப் பார்த்தால் தெரிந்துகொள்ளமுடியும். அவர்கள் முகத்திரையை விலக்கினால், நீதிபதிக்கு முகத்தைப் பார்த்து புரிந்துகொள்ளமுடியும் என்று குற்றஞ்சாட்டப்பட்டவரின் சட்டத்தரணி கூறினார். அதற்கு அந்த 2 பெண்களும் மறுத்துவிட்டனர்.

இன்சூரன்ஸ் மோசடி தொடர்பான வழக்கில தன் கட்சிக்காரர் அப்துல் ரசீம்ஜுக்கு 'நியாயம் கிடைப்பதை சாட்சிகளான பரய்பா (வயது20), பயுசா சயிம் (34) ஆகியோரின் பிடிவாதம் தடுப்பதாக சட்டத்தரணி கொலின் அமெரி கூறினார். நியூசிலாந்தில் வசிக்கும் அவர்கள் அந்த நாட்டுச் சட்டத்தை மதிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். சாட்சிகள் மறுத்து வருவதால் வழக்கு விசாரணையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (8)

## 4 ஜோர்தானியர்கள் கடத்தப்பட்டனர்

அமெரிக்கக் கூட்டுப்படைக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் வெளிநாட்டுப் படைகளை ஈராக் நாட்டில் இருந்து வெளியேற்ற தீவிரவாத அமைப்பினர் வன்முறையைக் கையாண்டு வருகிறார்கள்.

ஈராக் பாதுகாப்பிற்காக அமெரிக்கப் படையினருடன் சேர்ந்து செயற்படும் ஜோர்தான் நாட்டு இராணுவத்தை உடனடியாக ஈராக்கை விட்டு வெளியேற்ற அந்த நாட்டைச் சேர்ந்த 4 பேரை இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பினர் கடத்திச் சென்றனர். அவர்கள் 4 பேரின் புகைப்படம் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை அவர்கள் வெளியிட்டனர்.

தம்மை ஈராக் நாட்டில் முஜாகிதீன் கொலைப் படை என்று அவர்கள் அறிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து தங்கள் நாட்டு மக்களை மீட்கும் நடவடிக்கையாக ஈராக் நாட்டில் இருந்து படைகளைத் திரும்ப அழைக்க ஜோர்தான் முடிவுசெய்துள்ளது. (8)

# ஈராக்கில் அமைதியை நிலைநாட்ட முஸ்லிம்களைக் கொண்ட சர்வதேசப் படை

## அமெரிக்காவுக்கு சவூதி தெரிவித்துள்ள ஆலோசனை

உலகில் உள்ள முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த இராணுவவீரர்களைக் கொண்ட புதிய சர்வதேசப் படை ஒன்று நிறுவப்பட்டு ஈராக்கிற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என சவூதி அரேபியா அமெரிக்காவிற்கு ஆலோசனை தெரிவித்துள்ளது. முற்று முழுதாக முஸ்லிம் வீரர்களைக் கொண்ட இச்சர்வதேசப் படையால் ஈராக்கில் அமைதி, ஒழுங்கு, சட்டம் ஆகியவற்றை சுலபமாக நிலைநாட்ட முடியும் என்று சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவின் தலைநகரான ஜெட்டாவில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவுலுக்கும், சவூதி சிரேஷ்ட அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போதே மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டது. இதுதொடர்பாக அநேக முஸ்லிம் நாடுகள் சவூதியை அணுகியுள்ளன. என்றும் சவூதி அதிகாரியொருவர் இதில் குறிப்பிட்டார். ஈராக்கில் தற்கொலைக் குண்டுதாரிகள் பரவலாகப் படுகொலை புரிந்து வருவதை [illegible] கடுமையாகக் கண்டித்துள்ள இத்தருணத்தில் இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

பக்தாத்தின் தென்கிழக்கில் உள்ள பக்குபாவில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலால் ஈராக்கை மறுசீரமைப்பதற்கான முயற்சிகள் தடைப்பட்டுவிடமாட்டா என்று இதில் சுட்டிக் காட்டப்பட்டது.

அதேவேளை கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பில் பலியானோரின் எண்ணிக்கை 70ஆக உயர்ந்துள்ளது என்றும் காயமுற்றோரின் தொகை அதிகரித்துள்ளதென்றும் ஈராக்கிய அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள யமகா 50 Y.C.L.S மொடல் (தனிப்பாவனையில் உள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்பு: 29/2B இராஜேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள வீதி), சனி முழு நாளும் பார்வையிடலாம். T.P. 0777-116132. (34721)

முட்டையிட ஆரம்பித்து மூன்று மாதங்களாகிய சிவப்புப் பேட்டுக்கோழிகள் (25) விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி நடேசன் சின்னம்மா, இடைக்காடு தெற்கு, இடைக்காடு, அச்சுவேலி. T.P 0777-116132 (34720)

Computer (With Printer, Scanner), TVS விக்ரர் மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி (Alcatel), பாவனைக்குரிய (உழுந்து அரைக்கும் இயந்திரம்) 10′ கிரைண்டர் No.7 Huller விற்பனைக்குண்டு. தொடர்பு: பிறேம் T.P. 021 - 222 - 5745. (34688)

ஒரு Great Dane ஆண் நாய்க்குட்டியும், கோழி எருவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34727)

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு, 3ஆம் கட்டைப் பகுதியில் நல்ல சூழலில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடாபு: T.P. 0773 049827. (34731)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler மற்றும் பேட்டுக் குஞ்சுகள் 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவுசெய்யவும். எமது பருத்தித் துறைக் கிளையிலும் Suddi வட்டுக்கோட்டைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34323)

தரமான Prima Broiler குஞ்சுகள் (விலை 40/-) 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34326)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயது, கிரகபாவம் குறைந்த நிரந்தரமாக அரச தொழில்புரியும் பட்டதாரி மணமகனுக்கு 26-32 வயதில் நற்பண்புள்ள அழகிய மணமகள் தேவை. தொழில்புரிபவர்களும், தொழிலை எதிர்பார்த்து இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விளம்பர இல. 2333 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34522)

## மணமக்கள் தேவை

நோர்வேயிலுள்ள மணமகளுக்கும், லண்டனில உள்ள மணமகனுக்கும் மணமக்கள் தேவை. அத்துடன் 78ஆம் ஆண்டு 40பாவம் செவ்வாய் குற்றமுள்ள ஜேர்மன் சிற்றிசன் மணமகனுக்கும், 72ஆம் ஆண்டு குற்றமில்லாத கனடா சிற்றிசன் மணமகனுக்கும், மணமகள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை, 361, கோயில் வீதி, நல்லூர். (34702)

## O/L கணிதம்

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 39 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40-60 மணித்தியாலங்களில் A,B பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. சந்திக்கும் நேரம் காலை 6-9 மணி. (34634)

## தவறிவிட்டன

**T.விஜயகுமார்** மானிப்பாய் என்பவரின் 500 - Hero Honda ss மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் புத்தகமும், பதிவுப் புத்தகமும் 28/07/2004 அன்று மூத்தனார் கோயிலுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் **ஐங்கரன் பார்மசி**, *அராலி தெற்கு, வட்டுக்கோட்டை* என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(34713) (40-21-12-15)

## Organ Notes

Organ, வீணை, புல்லாங்குழல், வயலின் போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் பாகம் 30 வரை வெளிவந்துள்ளன.

தொடர்பு: S.S.ரஜேந்திரன்
கரவீணா இசைமன்றம்
75 கோயில் வீதி, நல்லூர்.
T.P.No -0777031293
(நல்லூர் ஆலயத்தில் இருந்து 500 m தெற்கே)

(34734) (21-12)

## வியாபார ஸ்தாபனம் விற்பனைக்கு

யாழ். செம்மா தெருவில் அமைந்துள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்று (காணியும் கட்டடமும் சேர்த்து) விற்பனைக்குண்டு

தொடர்பு:-
M.S.A. அஸீஸ்,
3,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
சந்திப்பு நேரம்:- மாலை 4.00மணி முதல் 6.00 மணிவரை.
T.P.0776237254

(34732) (35-21-13)

---

சிவமயம்

# அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடம்

(தேரடி மடம்) நல்லூர்

## மறு அறிவித்தல்

**புனரமைப்பு வேலை காரணமாக இம்மடம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இதனால் அடியார்களுக்கு ஏற்படும் அசௌகரியத்துக்கு நாம் மனம் வருந்துகிறோம்.**

**அத்துடன் இம்மடத்தில் நடைபெறுவதற்கான சமய நிகழ்ச்சிகள் அல்லது அன்னதானம் குறித்தும் யாரிடமும் எவ்வித கொடுப்பனவுகளும் செய்யவேண்டாமென அடியார்கள், பொதுமக்கள் யாவருக்கும் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.**

நிர்வாகி
**203, பலாலி வீதி, கந்தர்மடம், அ.இ.ஆறுமுகம்,**
**யாழ்ப்பாணம்.**

(34711) (40-21-12-15)

---

# நன்றி நவில்கின்றோம்

## சுந்தரம் பஞ்சலிங்கம்

(மக்கள் வங்கி, மானிப்பாய்)

22-07-2004 வியாழக்கிழமை கொலைசெய்யப்பட்ட எங்கள் குடும்பத் தலைவன் **திரு.சு.பஞ்சலிங்கம்** அவர்களின் மறைவு கேட்டு எமது இல்லம் தேடிவந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த மக்கள் வங்கி உத்தியோகத்தர்களுக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர மாணவர்களுக்கும், அராலி வடக்கின் வாலிபர்களுக்கும், பத்திரிகை மூலமும் பிரசுரம் மூலமும் நேரிலும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், 25-07-2004 ஞாயிறன்று யாழ். போதனா வைத்தியசாலையில் உதவிய வைத்திய அதிகாரிகளுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அராலி வடக்கு.
**திருமதி ப.மஞ்சுளாதேவி**
(மனைவி)

(34723) (21-12-15)

---

விண்ணக வாழ்வில்

# 31ஆம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில் 13 - 08 - 1931

இறைவன் மடியில் 30 - 06 - 2004

## அமரர் சடாசிவம் சின்னத்தம்பி

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை
31ஆம் நாள் ஆனதையா
மாறாத நினைவுதனை மனதிலே
வரைந்து கொண்டு
தவறாமல் உமையே தினம் தினம்
எண்ணுகிறோம் ஐயா!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு
ஆனால் "ஐயா" என்று அழைக்க
யாருமில்லையே!

***அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (31.07.2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.***

*குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: 077 6157690

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(34698) (24-21-12-15)

---

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம்



செட்டியார்மடம், அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம் நேற்று (30.07.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*செட்டியார்மடம்,*
*அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.* (24-21-12-15)
**வி.செல்வராஜா** (குணம்)
(மருமகன்). (34722)

---

# நெஞ்சைவிட்டு நீங்காத எங்கள் அன்புத் தெய்வத்தின்

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

**Mummie! your unexpected loss continues with much and mighty sorrow of eternity.**



தோற்றம் 1931 - 09 - 25

மறைவு 1999 - 07 - 28



*கம்பர்மலை*

# திருமதி சிவகாமி இராமச்சந்திரன் (மம்மி)

**திதி: 31-07-2004**

எங்கள் இதயத் தெய்வம், குடும்பத் தலைவி
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
நெற்கொழு ஆதி வைரவ சுவாமியை
வேண்டி நிற்கும்:

"சிவகோட்டம்"
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு.

பாசமிகு:
திரு.ம.இராமச்சந்திரன் *(குடும்பத் தலைவர்)* மற்றும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய, சமூக சேவைகளில் முன்னின்ற கிராமத் தலைமைக்காரர்

வடமராட்சி கிழக்கிலே தோன்றி வடமராட்சி கிழக்குப் பகுதியில் சமயத்துக்கும்,



சமூகத்துக்கும் தொண்டாற்றியவர் வரிசையில் நிரந்தர இடம்பெற்றவர்களில் ஒருவர் அமரர் மு.வி. பாலசுந்தரம். இவர் 1924 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 4ஆம் நாள் அம்பன் கிராமத்திலுள்ள வினாசித்தம்பி சோதிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்

## நீத்தார் பெருமை

பக்கல்வியினை அம்பன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் மேற்படிப்பினை பருத்தித்துறை யா/ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்றார். மேற்படிப்பினை ஆங்கிலத்தில் கற்றுத் தேறியதால் ஆங்கில அறிவு நிரம்பியவராகத் திகழ்ந்தார். படித்துச் சித்தியடைந்து சமயத்துக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்றியவர். 1949 ஆம் ஆண்டு இவரது ஆளுமைக்குப் பொருத்தமான கிராமத் தலைமைக்காரர் பதவி கிடைத்தது.

இளமைக் காலம் தொடக்கம் சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட பாலசுந்தரம், இப்பதவியைப் பெரும்பேறாக எண்ணி கிராமத்துக்கு சமய, சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். எண்ணம், சொல், செயல் ஒரே நோக்கம் கொண்டவராகத் திகழ்ந்த காரணத்தினால் இவரது புகழ் மேலோங்கக் காரணமாயிற்று. இவரது நற்பண்புகள், ஆளுமைமிக்க செயற்பாடுகள் மேலதிகாரிகளை வியப்பில் ஆழ்த்தியது. இதன் பிரதிபலிப்பாக காலத்திற்குக் காலம் பதவி வகித்த பிரதேச செயலர்கள், யாழ்மாவட்ட அரசாங்க அதிபர்கள் இவரது சமய சமூகப் பணிகளை பாராட்டத் தவறவில்லை.

அம்பன் கிராமத்தில் அமைந்த தான்தோன்றி வரசித்தி விநாயகர், முருகன் ஆலயங்கள் இவரது இடைவிடா முயற்சியினால் கட்டப்பட்டன. 1984 ஆம் ஆண்டு தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வுபெற்றாலும் சமூகப் பணிகளிலிருந்து ஒதுங்கிவிடவில்லை.

2000 ஆம் ஆண்டு அம்பன் இந்து மயானத்திற்கு பருத்தித்துறை பிரதேச சபையினரைக் கொண்டு வீதி அமைத்து வெற்றிகண்டார். 26.07. 2001 ஆம் ஆண்டு இவ்வுலகவாழ்வை நீத்தார்.

**நல்லதம்பி தர்மகுலசிங்கம்.**

# புதிய நிர்வாகிகள்

காரைநகர், கிழவன்காடு கலா மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

வ.சோதிநாதன் தலைவராகவும், என்.கணேசமூர்த்தி செயலாளராகவும் எஸ்.இராசநாயகம் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். அம்மன்றம் சங்கீதம், நடனம் மிருதங்கம் ஆகிய வகுப்புகளை இலவசமாக நடத்தி வருவதுடன், காரைநகர் பிரதேச மாணவர்களிடையே கலை ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் கலை விழாவினையும் பரிசளிப்பு விழாவினையும் நடத்துவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. (10-73)




**இலங்கை பத்திரிகை ஆசிரியர் பேரவையினால் பத்திரிகைத்துறையில் சிறந்த சேவையாற்றியவர்களுக்கான 2003 ஆம் ஆண்டுக்கு விருது வழங்கும் வைபவம் கொழும்பு மவுண்ட்லவீனியா ஹோட்டலில் இம்மாத முற்பகுதியில் நடைபெற்றது. வடக்கிலிருந்து சமகாலப் பிரச்சினைகள், சுவாரஸ்யமான செய்திகளை வெளியிட்ட மைக்கான சிறப்பு விருதினை மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் எஸ்.தில்லைநாதன், விஜயா நியூஸ் பேப்பர் லிமிட்டெட்டின் தலைவர் ரஞ்சித் விஜயவர்த்தனாவிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (10)**

# மக்கள் முகம்



அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம்பெற்ற காரைநகர் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.அழகேந்திரன் காரைநகர் பிரதேச செயலகத்தினால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (10-73)

* * *



யாழ். மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பாடசாலை வேலைப் பரிசோதகராக நீண்டகாலம் கடமையாற்றிய உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் நாகேந்திரா தமது 60ஆவது வயதினைப் பூர்த்தி செய்து சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

அநுராதபுரம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டக் கல்வித் திணைக்களங்களில் 18 வருடகாலமாகத் தொழில்நுட்ப உத்தியோகத்தராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். (10-152)

* * *



ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தால் பிரதேச முகவர்களுக்கிடையில் கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட போட்டியில் யாழ். பிரதேசத்தில் நவிண்டிலைச் சேர்ந்த கார்த்திகேசு பஞ்சரத்தினம் இரண்டாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் ஜூன் மாதம் வரையில் கூடுதலான அங்கத்தவர்களைச் சேர்த்தமைக்காக முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டமைக்காகக் கௌரவிக்கப்பட்டார். (10-173)

* * *



சாவகச்சேரி நகர கிராம அலுவலர் வை.இராசரத்தினம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மந்துவில் கிழக்கில் பதில் கிராம அலுவலராகப் பணியாற்றியதற்காக அப்பகுதி மக்களால் 'சேவாநேசன்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (10)

* * *



நல்லூர் வடக்கு, சந்திரசேகரப்பிள்ளையார் வீதியில் வசிக்கும் அம்பலவாணர் இராஜரட்ணம், வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ கு.பொ.சி.வரதராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், ஓய்வுபெற்ற பொலீஸ் திணைக்கள எழுதுவினைஞரும் அகில இலங்கை சைவப்புலவர் சங்க உபதலைவரும் அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கத்தின் செயலாளரும் ஆவார். (10)

* * *

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் இயங்கி தற்போது பரந்தன் கெமிக்கல் கொம்பனி லிமிட்டெட் எனச் செயற்படும் நிறுவனத்தின் தலைவராக பொ.தியாகராசா மீண்டும் பதவியேற்றுள்ளார். கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் கல்வி வாழ்க்கைத் தொழிற்பயிற்சி உதவும் அமைச்சு ஆகிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சுக்கமைய ஜனாதிபதியினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் தொழில் முகாமையாளராக 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய தியாகராசா, பேராதனை பல்கலைக்கழக இரசாயனவியல் சிறப்புப்பட்டதாரியும் லண்டன் சிற்றி ப்ல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் என்ஜினியரிங் துறையில் முதுமாணிப் பட்டமும் பெற்றவருமாவார்.

2000 ஆம் ஆண்டில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் தமிழ் விவகார அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக கே.என். டக்ளஸ் தேவானந்தா பணியாற்றியபொழுதும் இவரின் சிபார்சில் தியாகராசா தலைவராக நியமிக்கப்பட்டபொழுது 30 ஆண்டுகளுக்குப் பின் தமிழர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டில் கைத்தொழில் மேம்பாடு சம்பந்தமான நிறுவனங்களின் செயற்பாட்டில் இணைந்து முகாமைத்துவ பங்களிப்பு வழங்கிய தியாகராசா கடந்த காலத்தில் இந்துசமய விவகார அமைச்சரின் இணைப்புச் செயலாளராகவும் பணியாற்றியவராவார். இவர் யாழ் இந்துவின் பழையமாணவராவார். (ஐ)

# நூல் வரிசை

## விடுதலை நோக்கை வளர்க்கும் தந்தை செல்வா காவியம்

மொழியும் நாடும் இணைந்தபேர் தமிழீழம்
மொய்ம்புறு கலாசார விழுமியம்
கலைகளும்
அழியும் நிலைகண்டு வெகுண்டினி
நாங்களோ
அடிமைகள் அல்லர் ஒன்றாகி நிற்பதால்
தனியா சொன்றெம் சொந்தத் தாயக
மண்ணிலே
தன்னாட்சி செய்யவும் சுதந்திரம்
உள்ளவோர்
இனிதான இணைப்பாட்சி ஒன்றினைக்கேட்டு
நாம
எழுந்திடு வோமென அறைகூவிநின்றாரே
(பக்கம்21)

இவ்வாறு தமிழீழத் தந்தை சா.யே.வே. செல்வநாயகம் அவர்கள் பற்றிக் கவியரசர் தில்லைச்சிவன் அவர்கள் தந்தை செல்வா காவியம் என்ற வரலாற்றுக் காவிய நூலில் பாடியுள்ளார்கள்.



நூல்: **தந்தை செல்வா காவியம்**
ஆசிரியர்: **'தில்லைச்சிவன்'**
கிடைக்குமிடம்: **தாமரை 45/1, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**விலை: ரூபா** 100/-



1940 களின் நடுப்பகுதியில் தனித்தமிழீழம் பற்றிப் பேசிய தந்தை செல்வா, பின் இலங்கைத் தமிழரசுக் கட்சி அமைத்து இலங்கைக் கூட்டாட்சிக்குட்பட்ட ஈழத் தமிழரசுக் கொள்கையை முன்வைத்தார். தமிழ் மக்கள் அறவழிப் போரில் ஈடுபட்டனர். இப்போராட்டக் கோரிக்கைகளை இலங்கை அரசுகள் செயற்படாத நிலையில் தந்தை செல்வா மீண்டும் 1970களின் தொடக்கக் காலத்தில் தமிழீழக் கோட்பாட்டை முன்வைத்து, கட்சிகளையும் மக்களையும் ஒன்றிணைத்தார். தமிழர் உரிமை வழங்கப்படாவிட்டால் இலங்கை அரசுகள் ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ள நேரும் என எச்சரித்தார்.

1970 களில் தமிழீழம் கோரும் ஆயுதப் போர்க் கோட்பாடுடைய பல இயக்கங்கள் தோன்றின. இன்று ஒரேயொரு இயக்கம் தமிழீழத் தலைமையை ஏற்று மக்களின் பேராதரவைப் பெற்று இயங்கிவருகின்றது. இது தந்தை செல்வாவின் வரலாற்றுத் தொடர்ச்சியாகும். இவ்வரலாற்றுத் தொடர்ச்சியைத் தில்லைச்சிவன் அவர்கள் இந்நூலில் விளக்குகின்றார்.

தில்லைச்சிவன் அவர்கள் 1947 ஆம் ஆண்டு முதல் கவிதைகள் மூலம் தமிழின விடுதலைப் போரை வலியுறுத்திவந்தார்கள். அவர்களது இத்துறைசார்ந்த முதல் கவிதை 1947 இல் 'புயல்' இதழில் வெளிவந்தது. தந்தை செல்வா தொடங்கிய சுதந்திரன் இதழிலும் தில்லைச்சிவன் விடுதலைக் கவிதைகள வெளிவந்தன. 1949 ஆவணி 5 ஆம் திகதியளவில் சுதந்திரனில் அவர்களது பின்வரும் பாடல் வெளிவந்தது.

தமிழர் நாடு தமிழருக்கெனும்
முரசம் எங்கும் கேட்கவே
தமிழர் வாழ்வில் உரிமைகோரித்
தமிழர் நாங்கள் கூடுவோம்.

பத்தொன்பதாவது - இளமை- வயதிலேயே தமிழர் விடுதலை பற்றிப் பாடத் தொடங்கிய தில்லைச்சிவன் தமது எழுபத்தாறாம் வயதில் 'தந்தை செல்வா காவிய'த்தைப் பாடியுள்ளார். இன்றும் அவருடைய உள்ளத்தில் தமிழர் விடுதலை எண்[illegible] காவியம் உணர்த்துகின்றது.

இக்காவியத்தில் தமிழ் ஈழப் போற்றிசை முதல் 'தெய்வம் தந்த துணை' ஈறாக முப்பத்து நான்கு இயல்களில் செல்வா வரலாற்றினூடாக ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் சிறப்பாகவும் விரிவாகவும் விளக்கப்படுகிறது.

'நல்லூரில் தமிழ் அரசர்', 'இழந்த சுதந்திரமும் எதிர்த்த முதற்குரலும்', 'செல்வா தோன்றினார்', 'சிங்களவர் தமிழர் பகை', 'செல்வாவின் காலத்தில் தமிழர் நிலை', 'தமிழ் அரசுக் கட்சியும் செல்வாவும்', 'ஆங்கில அரசின் பொறுப்பு', 'செல்வாவும் சுதந்திரனும்', 'தீவகத்தில் செல்வா', 'செல்வாவின் சித்தாந்த விளக்கம்', 'செல்வாவின் தீர்க்கதரிசனம்', 'தமிழர் தேசியத்தின் தந்தை', 'செல்வாவின் முதற்போர்'... என்று ஈழத் தமிழரின் முதற்கட்டப் போராட்ட வரலாறு இக்காவியத்தின் முப்பத்து நான்கு இயல்களிலும் சிறப்பாக விளக்கப்படுகிறது.

நூலின் முதல் இயலில் தமிழீழத்தின் தொன்மையின் இரு நிலைகளைத் தில்லைச்சிவன் பின்வருமாறு விளக்குகிறார்.

எண்டிசையும் போற்றிசைக்கும்
இராவணனும் மறைபுகலும்
மண்டோ தரியும் மகிழ்ந்தாண்ட தமிழீழம்..
பூதன்தேவர் முதலாம்பல புலவர்களின்
கவிவளமும்
தேவர் தமிழ்மறையும் தெரிந்தேத்தும்
தமிழீழம்
(பக்கம் 15)

நல்லூர் அரசுக்கு மிகமிக முற்பட்ட காலம் முதலே ஈழத்தில் தமிழர் வாழ்ந்த வரலாறு இவ்வியலில் விளக்கப்படுகின்றது.

மூன்றாம் இயலில் தமிழீழ அரசின் வீழ்ச்சியும் நாம் அடிமைகளான வரலாறும் கூறப்படுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சி முடிவில் அவர்களால் தமிழீழ அரசும் சிங்களவரிடம் ஒபபடைக்கப்பட்டது.

'அன்னியன் தமிழ்மண்ணை அயலவர்க்கு
ஈய்ந்ததனை
எண்ணிக் கவன்று ஈழத்தை மீட்டெடுத்து
இன்றே இணைப்பாட்சிக் கெழுவீரென்
றார்செல்வா
(பக்கம் 18)

என்ற செல்வாவின் முதற்குரல் இவ்வியல் முடிவில் கூறப்படுகின்றது. இங்கு 'ஈழம்' என்பது தமிழீழத்தையே குறிக்கின்றது என்பது நினைவு கூரத்தக்கது.

ஈழத்தில் நீண்ட காலம் தமிழ் அரசும் சிங்கள அரசும் இருந்தன. ஆங்கிலேயர் தவறாக ஆட்சியைச் சிங்களவரிடம் ஒப்படைத்துவிட்டனர். சிங்களவர் சிங்கள தேசத்தை ஆளலாம். தமிழர் தமிழ்த்தேசத்தை ஆளும் உரிமை உடையவர் என்பது தந்தை செல்வாவின் கருத்து. இதைத் தில்லைச்சிவன் பின்வருமாறு விளக்குகின்றார்.

ஆண்ட தமிழினம் மீண்டும் ஈழத்தை
ஆள்வது தவறென எவ்வாறு சொல்வீர்?
மாண்டபல் நூற்றாண்டு அன்னிய நாட்டிடம்
மண்டியிட்டிருந்த சிங்கள இனமின்று
மீண்டும் இலங்கையை ஆள்வது சரியென்றால
மேலும் நாம் போரிட்டு இழந்த எம் பூமியை
ஆண்ட அன்னியன் ஓடிய பின் அதன் .
ஆட்சியெமக் கென்றே அறைந்தனர்
செல்வாவே (பக்கம்48)

இச்சிறப்புக் காவியத்துக்கான அறிமுகவுரையை வரலாற்றுத்துறைப் பேராசிரியரான சி.க சிற்றம்பலம் வரலாற்று நோக்கில் எழுதியுள்ளார். இதன் சிறப்பையும் பயனையும் அவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

"சமகால நிகழ்வில் பங்காளியாகி வாசிப்போரின் மனதைக் கவரும் வண்ணம் இப்போராட்ட வரலாற்றைச் சிறப்பாகத் தந்த அறிஞர் தில்லைச் சிவனுக்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது. காரணம் மக்களை இலட்சியப் பாதைக்கு இட்டுச் செல்வது நூல்களாகும்... எமது இளஞ்சந்ததியினர், எமது இனம் நடந்து வந்த பாதையை அறிவதன் மூலம் தமது அறிவைப் பெருக்குவார்கள், மட்டுமின்றி இத்தகைய இலட்சியப் பயணத்துக்குத் தமது பங்களிப்பென்ன என்று அவர்களது மனச்சாட்சியைத் தொடவைக்கும் தகுதியும் இந்நூலுக்குண்டு. காலத்தின் தேவைக்கேற்ப வெளிவரும் இந்நூலைப் படித்துப் பயன்பெற்று எமது பங்களிப்பினை எமது இனவிடுதலைக்கு ஆற்றுவோமானால் இந்நூலாசிரியரின் கனவு நனவாகும் என்பதில் எள்ளளவு சந்தேகமில்லை".

ஈழத் தமிழர்கள் அனைவரும் இந்நூலைப் பெற்றுத் தவறாது படித்துத் தமது இனவிடுதலை நோக்கை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**மயிலங்கூடலூர் பி.நடராசன்.**

பொதுநூலகங்கள், பாடசாலை நூலகங்கள என்பனவற்றுக்கு நூலாசிரியர் தில்லைச்சிவன் அவர்கள் தமது இக்காவிய நூலை அன்பளிப்பாக வழங்கமுடிவு செய்துள்ளார்.

எனவே . நூலகம் சார்ந்தவர்கள் அவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு நூலை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணத்துக்கு வழங்கிய பரிசை மீளப்பெறப் பொலீஸிடம் புகார்

கொழும்பு,ஜுலை31

பெண்ணொருவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அயல் வீட்டில் இடம்பெற்ற திருமணத்தின்போது தம்பதிக்கு வழங்கிய திருமணப் பரிசை மீளப்பெற்றுத் தருமாறு பொலீஸாரிடம் கோரியுள்ளார். கொழும்பு கடவத்தைப் பகுதியில் இந்த விநோத சம்பவம் இடம்பெற்றுள்ளது.

2002 ஆம் ஆண்டில் அயல் வீட்டில் நடந்த திருமண வைபவத்துக்கு பிரஸ்தாப பெண்ணுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. திருமணத்துக்குச் சென்ற அவர் மணமக்களுக்குத் தனது பரிசாகக் கண்ணாடிக் குவளைகள் கொண்ட பெட்டியைப் பரிசளித்துள்ளார்.

அண்மையில் இந்த இரு தரப்பினருக்குமிடையே வேலித் தகராறு இடம்பெற்றது. அதைத் தொடர்ந்தே திருமணத்தின்போது தாம் வழங்கிய திருமணப் பரிசைத் திரும்பப் பெற்றுத் தருமாறு அந்தப் பெண், பொலீஸாரிடம் கோரியுள்ளார்.

பொலீஸார் இரு தரப்பினரையும் பொலீஸ் நிலையத்துக்கு வரவழைத்தனர். பரிசை வாங்கிய பெண் அப்போது ரூபா 150 பெறுமதி கொண்ட கண்ணாடிக் குவளைகள் அடங்கிய பெட்டியொன்றைப் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்து வந்தார். ஆனால் அதுதான் வழங்கிய பரிசுப்பொருள் அல்ல என்று மற்றப் பெண் தெரிவித்தார்.

தாம் ரூபா 350 பெறுமதியான கண்ணாடிக் குவளைகள் அடங்கிய பெட்டியையே பரிசளித்தார் என்று அப்பெண் கூறினார். பின்னர் அயல் வீட்டுப் பெண் மேற்படிப் பெண்ணுக்கு 350 ரூபாவை வழங்கியதையடுத்துக் கடவத்தைப் பொலீஸார் இந்தத் திருமணப்பரிசு விவகாரத்தை ஒருவாறு முடித்துவைத்தனர். (ஒ)

## நல்லொழுக்கத் தினப் போட்டிகள்

வலி.தெற்கு,ஜுலை31

சர்வதேச நல்லொழுக்கத் தினத்தை முன்னிட்டு உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாகப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

நல்லொழுக்கம் சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்காக போரூட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'சக்தி' அமைப்பினூடாக இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (10-152)


## விசேட அறிவித்தல்

1) யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் 01-08-2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
2) பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேடமாகக் கடன் கொள்வனவிற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்கு, விற்பனை நிலையத்தில் செய்யப்பட்டுள்ளது.
3) பாடசாலைகள், நூல்நிலையங்கள், சனசமூக நிலையங்களுக்கும் கடன் கொள்வனவிற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(சி-36611)(21-13-19-24)



We Serve

வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும்

## மாபெரும் இலவச மருத்துவ முகாம்

S.M. பெர்னாண்டோ ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.

☆ நீரிழிவு வியாதி ☆ இரத்த அழுத்தம்

ஏனைய வியாதிகளும் சோதனைசெய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்படும்.

காலம்: இன்று 31 ஜுலை 2004 சனிக்கிழமை
இடம்: ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம், சுழிபுரம் மேற்கு
நேரம்: காலை 9.30 மணி

அனைவரையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

பு.சிவலிங்கம், செயலாளர், வ.மே.பி.ச.
லயன் சி.சிவராஜேஸ்வரன், தலைவர்.
லயன் A.C.தவரஞ்சித், செயலாளர்.
லயன் R.சிவயோகன், செயற்றிட்ட செயலாளர்.

(34701) (26-13-19-24)



DXN

ஆரோக்கிய வாழ்வை வளமாக்கும் வழிகாண விரையுங்கள்

## ரிஷி காளான் பற்றிய விஷேச கருத்தரங்குகள்

தற்போது அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா உட்பட 30 நாடுகளில் உள்ள மக்களால் அதிகம் விரும்பிப் பாவிக்கப்பட்டுவரும் அற்புத மூலிகை ரிஷி காளான் 5000 ஆண்டுகளுக்கு முதலிருந்தே பண்டையகால அரசர்களாலும், ரிஷிகளாலும் உபயோகிக்கப்பட்ட ஓர் அதிசய மூலிகை. இது உடலின் அழிந்த அணுக்களை அகற்றி புதிய அணுக்களை உருவாக்கி தசை நார்களை சீராக இயங்கச் செய்து நல்லாரோக்கியத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் வழிவகுக்கின்றது.

இந்தியாவில் இருந்து வருகை தரும் வைத்திய நிபுணரினால் கீழ் தரப்பட்டுள்ள இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.



பிரபல இருதய சிகிச்சை நிபுணர்
**Dr. ஸ்ரீனிவாசன் ரஞ்சன் M.D,D.M.**
*Visiting Cardiologist*
*Apollo Hospital - Chennai*
*Vijiya Heart Foundation - Chennai*

### இயற்கை முறையில் ஆரோக்கிய வாழ்வு

| திகதி | நேரம் | முகவரி | இடம் | வழங்குபவர் |
|---|---|---|---|---|
| 31.07.04 | மு.ப 10.00 | பர்வத பத்தினி மண்டபம், சிவன்கோவில். | பருத்தித்துறை | Dr. ரஞ்சன் |
| 31.07.04 | பி.ப 03.30 | யா/கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். | கைத்தடி | Dr. ரஞ்சன் |
| 31.07.04 | பி.ப 06.30 | ஞான பாஸ்கரோதய சங்கம், கள்ளியங்காடு. | யாழ்ப்பாணம் | Dr. ரஞ்சன் |
| 01.08.04 | மு.ப 10.00 | பிரதேச சபை மண்டபம், யாழ் வீதி. | மானிப்பாய் | Dr. ரஞ்சன் |
| 01.08.04 | பி.ப 04.00 | நாவலர் கலாச்சார மண்டபம், நாவலர் வீதி. | யாழ்ப்பாணம் | Dr. ரஞ்சன் |
| 03.08.04 | பி.ப 03.00 | வியாபார பாடசாலை, இல.97, கிங் வீதி. | மாத்தளை | Dr. ரஞ்சன் |
| 05.08.04 | பி.ப 05.00 | நலன்பரிச்சங்கம், பம்பலப்பிட்டி | கொழும்பு | Dr. ரஞ்சன் |

### கிளை நிறுவனங்கள்

இல. 473, தட்டாதெருச் சந்தி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். ☎ 0777 418878
இல. 263, பேரதேனிய வீதி, கண்டி, ☎ 081 2203486
இல. 45, வித்தியாலயம் வீதி, திருகோணமலை. ☎ 026 2222381

**DXN** SRI LANKA OFFICE
No. 15, Stamboul Place, Colombo 03. Tel : 2575753, 4723396 Fax : 2370796
E.mail : info@magnumsl.com Website : www.magnumsl.com

வைத்திய நிபுணரினால் இலவச மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படும்


# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி

கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைக்கான கேள்விகள், கேள்விச்சபைத் தலைவரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2004.08.10ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயர் | வேலை விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை | வகுப்பறையை ஆரம்பக் கல்வி வகுப்பறையாக மாற்றுதல் | ரூபா 500 | ரூபா 4000 |
| 2. யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை | வகுப்பறையை ஆரம்பக் கல்வி வகுப்பறையாக மாற்றுதல் | ரூபா 500 | ரூபா 3250 |
| 3. யா/புற்றளை ம.வி. | வகுப்பறையை ஆரம்பக் கல்வி வகுப்பறையாக மாற்றுதல் | ரூபா 500 | ரூபா 4500 |
| 4. யா/வல்வெட்டி இ.த.க. பாடசாலை | வகுப்பறையை ஆரம்பக் கல்வி வகுப்பறையாக மாற்றுதல் | ரூபா 500 | ரூபா 6000 |
| 5. யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | வகுப்பறையை ஆரம்பக் கல்வி வகுப்பறையாக மாற்றுதல் | ரூபா 500 | ரூபா 3750 |
| 6. யா/மணியகாரன்தோட்டம் அ.த.க. பாடசாலை | வகுப்பறையை ஆரம்பக் கல்வி வகுப்பறையாக மாற்றுதல் | ரூபா 500 | ரூபா 5250 |
| 7. யா/தேவரையாளி இந்துக்கல்லூரி | வகுப்பறையைக் கணனி அறையாக மாற்றுதல் | ரூபா 500 | ரூபா 3750 |

1. மேற்படி வேலைக்கான இக்ராட் (ICTAD) தரம் 9இற்கும் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும்.
2. மீளளிக்கமுடியாத, மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தைத் தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (பே ஓடர்) வடமராட்சி வலயப் பாடசாலை வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2004.08.02ஆம் திகதி தொடக்கம் 2004.08.06ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
4. இவ்வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் தனித்தனி கடித உறையில் இட்டு, உறைகளின் இடப்பக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரையிட்டு, *வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி, புலோலி* என முகவரியிட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 2004.08.10ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், இவ்வேலை தொடர்பான மேலதிக விவரங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளும்படி அறியத்தருகிறேன்.

வே.தி.செல்வரத்தினம்
கேள்விச் சபைத் தலைவரும்,
வலயக் கல்விப் பணிப்பாளரும்,
வடமராட்சி.

(சி-36637) (21-13-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களின் வருகையை தமிழீழ மண் எதிர்பார்க்கிறது

## தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

வட்டக்கச்சி,ஜூலை31

போர் காரணமாகப் பாதிக்கப்பட்ட எமது தமிழீழ மண் அர்ப்பணிப்பு மிக்க கலைஞர்களது வருகையை எதிர்பார்த்து நிற்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன்.

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் நடைபெற்ற பரத நாட்டியக்கலைஞர் ஜாகீர் உசேனின் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலத்தில் நடைபெற்ற போரினால் எமது மண் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இங்கு எமது கலைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். இதற்குக் கலைஞர்களின் வருகை முக்கியமானதாகும் - என்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பரத நாட்டிய விஷேட கருத்தரங்குகளையும், செய்முறைப்பயிற்சியினையும் நடத்தியமைக்காக ஜாகீர் உசேனின் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 24ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் அழகியல் கலாமன்ற முதல்வர் க.விஜயசேகரன் தலைமையில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து கலைஞர் ஜாகீர் உசேனுக்கு அரசாங்க அதிபர், தமிழ்ழ மண்ணையும், வளங்களையும் சித்திரிக்கும் நினைவுப்பரிசினை வழங்கிக் கௌரவித்தார். கருத்தரங்கிற்குத் துணைபுரிந்த யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறை உதவி விரிவுரையாளர் த.பிரதீபனுக்கும், மாணவன் எஸ்.ரமணனுக்கும் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பரிசில்களை வழங்கிக்கௌரவித்தனர்.



இறுதியாக அழகியற் கலாமன்றச் செயலாளர் திரு. அ.பங்கையற்செல்வன் நன்றியுரையாற்றினார். (4-405)

## பிரதேச செயலகக் கட்டடம் திறந்து வைப்பு

ஒட்டுசுட்டான்,ஜூலை31

கரைதுறைப்பற்று பிரதேச செயலகக் கட்டடம் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச செயலர் காசிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமீழீழத் தேசியக்கொடியினை முல்லை மாவட்ட நிர்வாகசேவைத் துணைப் பொறுப்பாளர் பொன் நிலாவும், பிரதேசச் செயலகக் கொடியினை பிரதேச செயலர் காசிப்பிள்ளையும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து செயலகப் பெயர்ப்பலகையினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அலுவலகக் கட்டடத்தினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும், மாநாட்டு மண்டபத்தினை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் நாடா வெட்டித் திறந்துவைத்தனர்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர். முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆசியுரை வழங்கினார்.

(4-341-203)

## ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வட்டக்கச்சி,ஜூலை31

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் புதிய பாடத்திட்டமாயின் 'ஏ' அல்லது 'பீ' தரச்சித்தியும், பழைய பாடத்திட்டமாயின் 'டீ' அல்லது 'சீ' தரச்சித்தியும் பெற்றிருப்பதுடன் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

'அத்துடன் ஆங்கிலத்தில் தேர்ச்சியுடைய ஓய்வு பெற்ற அரச அலுவலர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(4-201-405)

# பளை அரசினர் மருத்துவமனையில் வசதிகள் இன்றி மக்கள் சிரமம்

பளை, பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இவர்களுக்கென அங்கு இருக்கும் ஒரேயொரு வைத்தியசாலை பளை அரசினர் மருத்துவமனைதான்.

அங்கு ஒரேயொரு மருத்துவர் மட்டுமே கடமையாற்றுகின்றார். அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தினமும் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் பளைக்கு வரும் மருத்துவர் மாலையில் வீடு திரும்புகின்றார். வைத்தியர் வருவதற்கு முன்னரும் அவர் வீடு திரும்பிய பின்னரும் நோயாளர்கள் படும்பாடு அதோகதிதான்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசர நோயாளர்களைப் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அல்லது யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கின்றது என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறம் இருக்க -

பளை ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டி ஒன்று இருக்கின்ற போதிலும், அதற்கு நிரந்தரமான சாரதி நியமிக்கப்படவில்லை. ஆஸ்பத்திரியின் சிற்றூழியர் ஒருவரே தற்காலிகமாக சாரதியாகக் கடமையாற்றுகின்றார். 'வார்ட்' வசதிகள் இல்லை. வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இருக்கின்றது. நிரந்தரமாக ஒரு மருந்தாளர் கூட இங்கு இல்லை. இந்த ஆஸ்பத்திரியின் வசதியீனங்கள் குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இப்பகுதி மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் எந்தப்பலனும் இல்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

(4-352)

### வன்னிச் செய்திகள்

# கூட்டுறவுச் சபை நடத்திய போட்டிகளின் முடிவுகள்

வட்டக்கச்சி,ஜூலை31

கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச்சபையினால் 82 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, வினாடி வினாப் போட்டி என்பவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

**தரம் - 10,11**

முதலாம் இடம்: தி.சிறீரஜீவன், (கிளி.இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்: மு.இராஜிகா (அக்கராயன் அ.த.க.), மூன்றாம் இடம்: மோ.சுதர்சினி (கிளி.பாரதி.வித்.).

**தரம் - 12,13**

முதலாம் இடம்: சி.பிரசாத் (கிளி.முருகானந்தா ம.வி.), இரண்டாம் இடம்: செ.ஜதீசனா (வட்டக்கச்சி ம.வி.), மூன்றாம் இடம்: ஜெ.பிரதீபா (கண்டாவளை ம.வி.).

**கட்டுரைப் போட்டி**

தரம் - 10,11

முதலாம் இடம்: மோ.சுதர்சினி (கிளி.பாரதி வித்தி.), இரண்டாம் இடம்: பா.வாசுமதி (கனகபுரம் ம.வி.), மூன்றாம் இடம்: சு.சுஜிதா (பூநகரி ம.வி.).

தரம் - 12,13

முதலாம் இடம்: பா.கோமளா (வட்டக்கச்சி ம.வி.), இரண்டாம் இடம்: த.மேனகா (கண்டாவளை ம.வி.), மூன்றாம் இடம்: செ.தர்சிகா (இராமநாதபுரம் ம.வி.), சு.துவாரசி (கிளி. இந்து கல்லூரி)

**சித்திரப்போட்டி**

**தரம் - 10,11**

முதலாம் இடம்: ம.கஜரூபி (இராமநாதபுரம் ம.வி.).

**தரம் - 12,13**

முதலாம் இடம்: செ.ஜதீசனா (வட்டக்கச்சி ம.வி.), இரண்டாம் இடம்: மு.சிறிதரன் (கிளி.மத்திய கல்லூரி).

**வினாவிடைப் போட்டி (குழு)**

முதலாம் இடம்: கிளி.முருகானந்தா ம.வி., இரண்டாம் இடம்: கிளி.இந்துக்கல்லூரி, மூன்றாம் இடம்: கனகபுரம் ம.வி.

மேற்படி மாணவர்கள் மாகாணமட்டப் போட்டிகளில் பங்குகொண்டனர். (4-405-204)

## பொதுக்கிணறுகள் திருத்தப்படாததால் தண்ணீருக்குத் தட்டுப்பாடு

வட்டக்கச்சி,ஜூலை31

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் காணப்படும் பொதுக் கிணறுகளில் பெரும்பாலானவை நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாததால் பயன்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ளன. இதனால் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டுக் கிணறுகளைப் புனரமைக்க உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.

(4-405-201)



லண்டன் 'ரீ.ஆர்.ரெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பக் கற்கைநெறி அண்மையில் ஆரம்பமானது. இதன் ஆரம்பநாள் நிகழ்வில் கணனிகளுடன் பயிலுநர்கள் சிலர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: கிளிநொச்சிச் செய்தியாளர்)*

# மாவட்ட மெய்வன்மைப் போட்டியில் சாதனை நிகழ்த்தியோர் கௌரவிப்பு

பரந்தன்,ஜூலை31

கிளிநொச்சி மாவட்டத்தில் 2004ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் போட்டியில் சாதனை நிகழ்த்திய கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் வீரவீராங்கனைகளைப் பாராட்டும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பரந்தன் வட்ட விளையாட்டுக் குழுத்தலைவர் சி.விக்ரர்மான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் ந.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் சு.கனகராசா, கண்டாவளைப் பிரதேச செயலர் சிசிவசொருபநாதப்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவரும், கிராம உத்தியோகத்தருமான சுபசுபதிப் பிள்ளை மற்றும் தமிழீழ விளையாட்டுத் துறைத் தலைவர் ப.பத்மநாதன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர்.

மாவட்ட மட்டத்தில் சாதனை படைத்தவர்களான பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு வீராங்கனைகள் கு.துஷ்யந்தினி (தட்டெறிதல், குண்டெறிதல்), சீ.சாந்தரூபீ (தத்திமிதித்துப் பாய்தல்), வி.டிவீனியா நிலுாசினி (10 ஆயிரம் மீற்றர் ஓட்டம்) ஆகியோருக்கும் -

மாகாண மட்டத்தில் இடம்பெற்ற விளையாட்டுக்களில் 42 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் முதலிடம்பெற்றுச் சாதனை படைத்த புளியம்பொக்கணை கண்ணகை அம்மன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இ.இராசேந்திரனுக்கும் - தங்கப்பதக்கங்கள் அணிவித்தும் பரிசுப் பொருள்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது.





'நிகொட்'திட்டத்தின் கீழ் முரசுமோட்டைமுருகானந்தா மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்தின் தோற்றத்தினை முதலாவது படத்தில் காணலாம். இக்கட்டடம் கடந்த 22 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. அக்கட்டடத்தினை 'நிகொட்' நிறுவன திட்டப்பணிப்பாளர் த.லங்காநேசன் நாடாவெட்டித் திறந்துவைப்பதையும், அருகில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், வித்தியாலய அதிபர் க.மயூரநாயகம், கிளிநொச்சி மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டு அகலாத

# 13ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்
23 – 04 – 1913

மறைவு
31 – 07 – 1991

## அமரர் வீ.எம்.கணபதிப்பிள்ளை

(வீ.எம்.கே.ஜுவல்லர்ஸ் - யாழ்ப்பாணம், சாவகச்சேரி)

இறப்பும் பிறப்பும், இம்மையும் மறுமையும் உண்மையில்
சாஸ்வதம் என்பதை உணர்ந்திடின் பொய்மையில்
வாழும் இப்புவிகள் வாழ்வில் உன்னதமாக உத்தமராக,
இம்மண்ணில் வாழ அன்போடு இணைந்து தந்தையே
நீங்கள் எங்களை வாழ்த்தி அருள் செய்ய வேண்டும்.
மண்ணிலே மீண்டுமோர் பிறவியுண்டெனில் மறுபடி
தங்களின் மக்களாய் பிறந்திட வேண்டி நிற்கும்......

கண்டி வீதி,
சாவகச்சேரி.

(C/36642)

பிள்ளைகள்,
வீ.எம்.கே.குடும்பம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அண்ணா தொழிலகம்

## குடாநாட்டு மண்வாசனையை

# வெளிநாடுகளிலும் பரப்பும் 'அண்ணா'

**1957**ஆம் ஆண்டு இணுவில் பகுதியில் சிறு குடிசைக் கைத்தொழில் முயற்சியாக முகிழ்ந்த நிறுவனம் இன்றைய நவீனயுகத்திலும் பழைமையான தொழில் மரபுப்படி இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேசத்திலும் தனது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்திச் சாதனை படைத்துவருகின்றது. மக்கள் மனதில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள அண்ணா கைத்தொழில் நிறுவனம்தான் அது.

இத்தகைய பெருமை மிக்க அந்தத் தொழிலகத்தின் நிறுவுநர் பொன்னையா நடராஜாவைச் சந்தித்தோம்.

63 வயது நிரம்பிய அவர் இன்றும் காலை முதல் இரவுவரை தனது தொழிலில் அயராது உற்சாகத்துடன் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

கடந்த காலத்தில் தான் தாண்டிவந்த இனனல்களையும், தமது எதிர்காலத்திட்டங்களையும் அவர் விளக்கினார்.

1958ஆம் ஆண்டு கொழும்பில் இனக்கலவரத்தில் சிக்கினேன். அன்றுதான் எனது தாய் மண்ணில் காலூன்றுவதே எமக்குச் சிறப்பு எனற இலட்சியத்துடன் இங்குவந்தேன்.

1959ஆம் ஆண்டு சிறு முதலீட்டுடன் எனது கூட்டுக்குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து 'கோப்பித்தூள்' தயாரிக்கும் தொழிலை ஆரம்பித்தோம். அத்துடன் 'பற்பொடி' தயாரிப்பிலும் ஈடுபட்டோம். உரலில் கோப்பியை இடித்துப் 'பைக்கட்' செய்து தருவார்கள் என் சகோதரிகள்.



சுகாதார முறையில் இனிப்பு வகைகள் பொதி செய்யப்படுகின்றன.

சைக்கிளில் அவற்றை நான் எடுத்துச்சென்று விற்பனை செய்துவருவேன் என்று தமது ஆரம்ப வாழ்வைக் கூறிப் பெருமைப்பட்டார் அவர்.


### 'அண்ணா'

உற்பத்திப் பொருள்களுக்கு 'அண்ணா' எனப் பெயரிட்டோம். அந்தப் பெயர் வைத்தமைக்காக பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. அக்காலப் பகுதியில் இந்திய அரசியல் தலைவர்களில் முக்கிய பங்கை வகித்த அண்ணாத்துரையின் பெயரைப் பயன்படுத்துவது நியாயமா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால், அந்த அண்ணாத்துரைக்கும் எமது தயாரிப்புப் பெயருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதே உண்மை.

அக்காலப்பகுதியில் சுதுமலையில் வசித்து வந்த அண்ணாமலைப் பரியாரியாரிடம் ஆலோசனை பெற்றே பற்பொடி தயாரித்தோம். அவரின் ஆலோசனைப்படி மூலிகைகளைச் சேர்த்து இந்தப் பற்பொடியைத் தயாரித்த காரணத்[illegible] அவரின் பெயரைச் சூட்டினோம் என்று த[illegible] ஏற்பட்ட ஆரம்ப எதிர்ப்பை புன்சிரிப்புடன் நினைவு கூர்ந்தார் அவர்.

அதன்பின் 1961ஆம் ஆண்டளவில் 'ஏ40' ரகக கார் ஒன்றை வாங்கி அக்கார் மூலம் உற்பத்திப்பொருள்களைக் கொண்டுசென்று விற்பனை செய்தோம். அண்ணாகோப்பிச் கார் என்று அக்கார் வரலாறு படைத்தது.

காலம் ஓடியது. எமது உழைப்பும் தொடர்ந்தது. - 1965ஆம் ஆண்டில் வான்களைக் கொள்வனவு செயது எமது வியாபாரத்தை யாழ்ப்பாணத்துக்கு வெளியே வன்னி, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களுக்கு விஸ்தரித்தோம்.




1968ஆம் ஆண்டு கொழும்பில் அலுவலகம் ஒன்றை ஆரம்பித்துத் தெற்கில் கதிர்காமம் வரை எமது வர்த்தகத்தை விஸ்தரித்தோம்.

இந்நிலையில் 'அண்ணா' பண்ணை பலாலி விமான நிலையத்துக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்டது. கோழி மற்றும் கால்நடைகள் வளர்ப்பு அதன்மூலம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், அங்கு திராட்சைத் தோட்டம் ஒன்றையும் ஆரம பித்தோம்.

இத்தக் காலப்பகுதியில் இலங்கைத்தீவு முழுவதிலும் அண்ணா உற்பத்திப் பொருள்கள விற்பனை செய்யப்பட்டன. அவற்றுக்கு நல்ல கிராக்கியும் ஏற்பட்டது.

தொடர்ந்து வந்த யுத்தச் சூழ்நிலையால் தெற்கு, கிழக்குச் சந்தை வாய்ப்பை இழந்தோம். குடாநாட்டை மட்டும் மையப்படுத்தி எமது வர்த்தகத்தை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

### பண்ணையை இழந்தோம்

சந்தை வாய்ப்பை இழந்த கையோடு பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் எமது பாரிய பண்ணையையும் இழந்தோம். இதற்கு ரூபா 10 லட்சம் ரூபா காப்புறுதிசெய்த அந்தப் பண்ணைக்கு நஷ்டஈடு தருவதாகக் கூறப்பட்டது. ஆனால், இன்று வரை அது கைக்குவந்து சேரவில்லை. ஆனால், வங்கியில் நாம் கடனாகப் பெற்ற 6 லட்சம் ரூபாவைச் செலுத்தவேணடிய கட்டாயத்துக்கு உட்பட்டோம். அடுத்தடுத்து இழப்புக்களைச் சந்தித்த போதும், மனம் தளராது முன்வைத்த காலைப் பின வைக்காது எனது வர்த்தகத்தைத் தொடர்ந்தேன்.

எனினும், 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வு என்னைப் பெரிதும் வாட்டியது. கிடைத்த சொற்ப முதலீட்டுடன் மீசாலையிலும பின்னர் வன்னியிலும் எனது உழைப்பைத் தொடர்ந்தேன்.

கிளிநொச்சியில் 30 ஏக்கர் நிலத்தைக் காடுவெட்டி காணி யாக்கி எனது சக ஊழியர்களுடன் இணைந்து மீண்டும் தளராத நம்பிக்கையுடன் தொழிலை ஆரம்பித்தோம். அதற்கு அண்ணாநகர் என்று பெயரிட்டோம். அதுவும் இராணுவ நடவடிக்கையால் செயல் இழந்து போனது. அதையடுத்து வவுனியாவில் சிறு அளவில் வர்த்தகத்தைத் தொடர்ந்தேன்.

என்ன நோக்கோடு, இலக்கோடு இந்த வர்த்தகத்தை ஆரம்பித்தேனோ அந்த இலக்குடன் மீண்டும் 1996 ஆம ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பினேன்.



பொதிகள் அச்சொட்டாக நிறுக்கும்போது.

### மனதை வாட்டிய காட்சி

குரக்கன், சோளம் போன்ற பயிர்களுக்கு கொள்வனவு உறுதியை நாம் வழங்குவதால் எமது விவசாயிகள் அதில் நாட்டம் காட்டுவது வழமை. 1995ஆம் ஆண்டு இடம்பெயரும்போது பெருந்தொகையில் குரக்கன், சோளம் போன்றவற்றைக் கொள்வனவு செய்து வைத்திருந்தோம். நாம் திரும்பிவந்தபோது யாரிடம் அவற்றைக் கொள்வனவு செய்தேனோ அவர்களே அவற்றை வண்டிகளில் ஏற்றி எடுத்துச்செல்லும் காட்சியைக் கண்டேன். எனது மனம் வாடியது. ஆனால், அதை நினைத்துக் கவலைப்படக் கூட எனக்கு நேரமிருக்கவில்லை. ஏனென்றால், எனது வர்த்தக இலட்சியத்தை அடையும் உத்வேகம் என்னை சோம்பியிருக்க விடவில்லை. மீண்டும் எனது வியாபாரத்தை ஆரம்பித்தேன். நவீன இயந்திர வசதிகள் வந்துள்ள இன்றைய காலத்திலும் எமது பழைமையைக் கைவிடவில்லை.

இன்றுள்ள நிலையில் கடந்தகால இழப்புக்களை ஈடுசெய்ய கடன்தருமாறு வங்கிகளிடம் கேட்டோம். ஆ[illegible] யுடன்தான் கடன் [illegible] றார்கள். தெற்கில் குறைந்த வட்டிகளில் கடன்களை வழங்கி கைத்தொழில்புரட்சி செய்யும் அரசுகூட எமது இழப்புக்கு நஷ்டஈடோ குறைந்த வட்டியுடன் கடனோ தர முன்வரவில்லை.

எமது கைத்தொழில் நிறுவனத்தில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுகின்றனர். எமது கைத்தொழிலை நவீன மயப்படுத்தினால் கூடுதலானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கமுடியும்.



கைத்தொழில் அதிபர் பொ.நடராஜா

### உற்பத்திகள்

எமது உற்பத்திகள் 3 வகைகளாக அமைந்துள்ளன. சமையலுக்குத் தேவையான பொருளகள், மக்களின் அன்றாட தேவையான பொருளகள், நானாவித பொருள்கள் என உற்பத்திகளை வகைப்படுத்தியுள்ளோம். மக்களின் அனறாடத் தேவைகளை விரைவு படுத்தும் நோக்கில் திடீர் தோசை மா, திடீர் அப்ப மா போன்றவற்றைத் தயாரிக்கிறோம்.

மக்கள் தமது தேவைகளை இலகுவில் விரைவாகப் பெற இந்தப் பொருள்கள் உதவும்.

### விரைவில் நூடில்ஸ்

இன்றைய தேவையை மதிப்பீடு செய்து நூடில்ஸ் தயாரிக்கும் தொழிலை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். நூடில்ஸு"டன் பதம்செய்த மரக்கறி, மசாலா ஆகியவற்றையும் தனித்தனியே பொதிசெய்யவிருக்கின்றோம். மக்கள் தமது தேவையை விரைவாகப் பூர்த்திசெய்ய இது உதவும். விரைவில் இந்த உற்பத்திச் சந்தைக்கு வரவிருக்கின்றது.



பாரம்பரிய முறையில் உற்பத்தி தயாராகிறது

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் குழந்தைகளுக்குப் போசாக்கு அளிக்கும் 'திரிபோஷா' எடுத்துவர முடியாதிருந்தது. அச்சமயம் யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் ஆர்.ராமதாஸின் வழிகாட்டலில் 'ஜீவாகாரம்' என்ற உற்பத்திப் பொருளை அறிமுகம் செய்தோம்.

அரிசி, உழுந்து, சோயா, பயறு ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கிய 'ஜீவாகாரம்' அச்சமயம் சிறுவரின் போசாக்குக்குப் பெரும் உதவியாக இருந்தது. ஆய்வு ஒன்று மேற்கொள்ளபட்டுக் தயாரிக்கப்பட்ட 'ஜீவாகாரம்' சிறுவர்களுக்கு ஊட்டச்சத்துக்கு ஆதாரமாக அமைந்தது.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் கூட இந்த ஜீவாகாரத்தைத் தமது உணவாக்கிக்கொண்டனர். எமது உற்பத்திப் பொருள்களில் ஜீவாகாரம் முக்கிய இடத்தை இப்போதும் வகிக்கின்றது.

எமது பிரத்தியேகமான தயாரிப்பான

**செவ்வி கண்டு தொகுத்தவர்**
**- குகா -**

'மசாலா கோப்பி' சர்வதேச மட்டத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கனடா, லண்டன், நோர்வே, பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் சந்தையில் இந்தக் கோப்பிக்கு பெரும்கிராக்கி உண்டு. ஆட்டாமா, அரிசி மா, குரக்கன் மா, ஜீவாகாரம் போன்ற எமது உற்பத்திப் பொருள்களும் வெளிநாட்டுச் சந்தையில் மதிப்புப் பெற்றுள்ளன.

கடந்த 45 வருடங்களுக்கு மேலாக பல நெருக்கடிகளையும் இன்னல்களையும் எதிர்நோக்கி வரலாறு படைத்து வரும் நிறுவனமாகச் செயற்படும் 'அண்ணா' நிறுவனம் வர்த்தகத்தை மட்டும் நோக்கமாகக் கொள்ளவில்லை. சமூகத்துக்கு ஏற்படும் இன்னல்களிலும் பங்குகொண்டு அவர்களுக்குத் தேவையான பணிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். அகதியாக வந்த மக்களுக்கு இடமளித்து வேண்டிய உதவிகளையும் வழங்கியுள்ளோம். இன்றைய நவீன யுகத்தில் தொழில்நுட்பங்கள் வளர்ச்சி கண்டு வரும் நேரத்திலும் எமது பாரம்பரியத்தைச் சிதைக்காமல் குடிசைக் கைத்தொழிலாகவே இதனை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார் அண்ணா தொழிலக நிறுவுநர் பொன்னையா நடராஜா.

# இரசாயன விஞ்ஞானக் கல்லூரியின் பட்ட நிலைக் கல்விக்கான வசதி

இலங்கை இரசாயன நிறுவனத்தின், இரசாயன விஞ்ஞானக் கல்லூரி இந்த ஆண்டுக்கான இரசாயனப் பட்டநிலைக் கற்கைநெறியை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்க உள்ளது.

தொழில் ரீதியான இந்தப் பட்டநிலைக் கல்வியானது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றால் வழங்கப்படும் சிறப்பு இரசாயனப் பட்டத்திற்குச் சமமானதாக ஏற்கப்பட்டுள்ளது. இது பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறியவருக்கும், வயது வந்தோருக்கும், வயதெல்லையைத் தாண்டியோருக்கும், உத்தியோகத்தில் மத்திய நிலையில் பணிபுரிவோருக்கும பயன்தரக் கூடியது. இத்திட்டத்தல் தேர்ச்சி பெற்றோர் உலகிலுள்ள அநேக பல்கலைக்கழகங்கள் ஊடாக பட்ட மேற்படிப்புகளான முதுமாணி, [illegible] பெறும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இந்த நிறுவனம் வழங்கும் பட்டநிலைக் கல்வியில் சித்தியடைவோர் பிரிட்டனின் றோயல் இரசாயன நிறுவனம், ஆஸ்திரேலிய கெமிக்கல் இன்ஸ்ரிரியூட் ஆகியவற்றில் பட்டதாரி உறுப்பினராகச் சேரத்தகுதியுடையவராவர்.

இந்தப் பட்ட நிலைக் கல்வியின் முதலாம் பிரிவு 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி கல்கிசையில் ஆரம்பமாகவுள்ளது. இப்பிரிவில் சேர்ந்து கொள்வதற்கு ஜி.சீ.ஈ. உயர் தரம் அல்லது அதற்கு இணையான தேர்வில் சித்தி எய்தியவர்கள் தகுதியுடையோராவர். மாணவர்களில் இருவருக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படும். இதற்கான தகுதிகாண் பரீட்சை செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் நடைபெறும். இது தொடர்பான விபரங்களை அறிய விரும்புவோர், 11-2691298 அல்லது 011-4201637 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ, இரசாயன விஞ்ஞானக் கல்லூரி, 120/10 விஜயராம மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான 'எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை யாழ்வலயக்கல்விப் பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-6)

**நாரந்தனை சின்னமடு மாதா யாத்திரைத் தலத்தில் கடை அமைப்பவர்களுக்கு!**

**ஆடி மாதம் 27 ஆம் திகதி முதல் ஆவணி 5 ஆம் திகதி வரை இடம்பெறும் திருவிழாவில் கடையமைக்க விரும்புவோர் 02.08.2004 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி ஆலயத்தில் இடம்பெறும் கூட்டத்திற்கு தவறாது நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

அருட்திரு.
R.பீற்றர் துரைரத்தினம்
- பரிபாலகர் -

சின்னமடு மாதா ஆலயம்,
நாரந்தனை. (34737)(34-19)

சிவமயம்
ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நமஹா

**பருத்தித்துறை, புலோலி வடக்கு, மருதடி**
**அருள்மிகு குருமணல் கந்தசுவாமி கோயில்**
**இன்று தேர்த் திருவிழா 31.07.2004**

**போற்றித் துதிப்போமே!**

திருமுருகா மால்மருகா வேல்முருகா!
தீராவினை தீர்க்கும் குமரேசா!
குருமணலில் உறைந்த குகனே!
வள்ளி மணாளனே வடிவேலவனே!
ஒரு தரமுன் பெயரை உச்சரித்திட்டால்
ஓடி வந்தே திருவருள் புரிவாய்!
பெருஞ் சாந்தி நாளில் பெருமானை நினைந்தே
போற்றித் துதிப்போமே காப்பாற்றையா!

*தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்தி அருள்வேண்டி நிற்கும்:*

சிவகௌரி நகைமாளிகை
பா.சிவனேசன்
திருமாலன் நகைத் தொழிலகம்
கஜானி ஜுவல்லறி.

விஸ்வகுல வீதி,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை.

(34736)(34-19)

**முதலாவது பிறந்த நாள் வாழ்த்து**



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த
**திரு. திருமதி சங்கரதாஸ்-லதா**
தம்பதிகளின்
செல்வப் புதல்வன் **மிதுன்**

31 - 07 - 2004



தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (31.07.2004) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். மிதுன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், அன்ராமார், தங்கை, மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளோடு பல்கலையும கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகின்றார்கள்.

நுணாவில் மேற்கு. சாவகச்சேரி.
திரு.திருமதி சங்கரதாஸ் தம்பதிகள். (34710)

# வசதியற்ற மாணவருக்கு கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை31

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினால் முன்னெடுக்கப்பட்டுவரும் கிராமியத் தகவல் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் சாவகச்சேரியில் அடுத்தமாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் இலவச கணனிப் பயிற்சி நிலையத்தில் பயில விரும்பும் வசதி குறைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி மாணவர்கள் சிபார்சுக் கடிதங்களுடன் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம். (10-201)

# விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலம், சித்திரம், விசேட கல்வி ஆகிய பாடநெறிகளில் உள்ள இணைக்கப்பட்ட விரிவுரையாளர் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் 'பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்' என்னும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மேற்படி முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும் எனவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்துள்ளார். (10-201)

**தேவை**

சாவகச்சேரியில் இயங்கும் தொழிற்சாலைக்கு மின்ஒட்டு வேலையில் அனுபவம் உள்ளவர் உடன் தேவை. சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்பு:
T.P.:0777- 177252.
(சி-36631)

**தவறிவிட்டது**

தங்கக் கைச்சங்கிலி ஒன்று கோண்டாவில் (கிழக்கு) சந்திக்கும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கும் இடையில் நேற்று (30.07.2004) வெள்ளிக்கிழமை காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

பிரம்மஸ்ரீ த.ரவிஜயா
கோண்டாவில் கிழக்கு, பழநி கோயிலடி,
கோண்டாவில்.
☎ 0712355483, 077 6160347
(34739) (24-34-19)

**ஓவிய ஆடல்**

ஓவிய வெளியீலோர்
நிருத்திய வீணா சங்கமம்
நடனம் :- செல்வன்.செ.ஸ்ரீகண்ணன்
செல்வி.இ.வசந்தினி
வீணை :- செல்வி.சோ.குமுதா

அனுமதி இலவசம்
**13**
யாழ்ப்பாணத்து ஓவியர்களின்
ஓவியங்களின் காட்சி

31.07.2004/ 10.00 a.m. - 5.00p.m.
பிரெஞ்சு நட்புறவுக்கழகம்,
83, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில்

THIRUMURUGAN COM NET.
46, Thirunelvely, Jaffna.

# நற்சிந்தனை நிகழ்வு

கோபாய் சைவ நற்சிந்தனைக்கழகம் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இன்று பிற்பகல் 3.30மணிக்கு வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய பஞ்சாட்சர மண்டபத்தில் ஆன்மீகப் பிரார்த்தனை, நற்சிந்தனை ஆகியவற்றை நடத்தவுள்ளது. அன்றையதினம் தீபாராதனை, தியானப் பயிற்சி, அருட்பாடல்கள் நடைபெறுவதுடன், இளவாலையூர் சைவப்புலவர் சு.செல்லத்துரையின் நற்சிந்தனை வழங்கலும் இடம்பெறும். (எ-6)

**கண்ணீர் அஞ்சலி**



சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய
தர்மகர்த்தா சபையின் நீண்டகால உறுப்பினரும்
முன்னாள் செயலாளரும் சமாதான நீதிவானும்
ஓய்வுபெற்ற ஆசிரியரும் சுதுமலை
இந்துசமய விருத்திச் சங்கத் தலைவருமான

**சேதுகாவலர் பொன்னம்பலம் (J.P.)**

அவர்களின் திடீர் மறைவு சுதுமலை அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையினருக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும் கவலையையும் தருகின்றது. இவ்வேளையில் அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையையும் அமரருக்கு அஞ்சலியையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்கு எல்லாம் வல்ல சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களை வணங்கி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய
தர்மகர்த்தா சபையினர்.

(34725)(35-34-19)

**90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

மலர்வு
24 - 12 - 1976



உதிர்வு
20 - 05 - 2004

**சிவநேசன் பாபு சங்கர்**

காய்க்கும் பருவம் வருமெனக் காத்த
வாய்ந்த நன்மரம் முறிந்துவீழ்ந் ததுவெனப்
பறிகொடுந் தேயுனைப் பதைக்கின் றோமே
மைந்தா வெங்குடி காக்க நீயும்
வந்தா யென்றே மகிழ்வுற் றனமே
நொடிப்போ ததனில் நொந்து பிரிந் தாயே
நிமல னடிப்போ ததனில்
நீங்கா துறைதி யெனவேண் டுவமே!

நாளை (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்களை வேண்டுகிறோம்.

பலாலி வீதி,
திருநெல்வேலி. (34730)(34-19)

க.சிவநேசன் தம்பதியினர்
(தந்தை-தாய்).

**150 ஆவது ஆண்டு நிறைவு விழா**
**(1854-2004)**

**புனித அல்போன்ஸ் லிகோரியார் ஆலயம்**
கச்சாய் வீதி, சாவகச்சேரி

எமது நிறைவு விழா மகிழ்வில் கலந்துகொண்டு புனிதரின் ஆசிபெற அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

**நற்கருணை விழா:**
31.07.2004 சனிக்கிழமை பி.ப. 5மணி
**விழாத்திருப்பலி:**
01.08.2004 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8மணி
**திருவுருவப் பவனி:**
01.08.2004 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5.30மணி

**அனைவரும் வாரீர்!**

குறிப்பு:
**மேற்படி விழாவை முன்னிட்டு நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் மலர்வெளியீட்டு விழாவுக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.**

சாவகச்சேரி. - ஆலய அருட்பணிச் சபை.
(34729) (34-19)

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**




நல்லூர், சங்கிலியன் வீதியைச் சேர்ந்த
**திரு. திருமதி சிறிக்குமாரன் - றோபேக்கா**
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
**மிதோஸ்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (31.07.2004) சனிக்கிழமை சுவிஸில் இருக்கும் தனது இல்லத்தில் அன்பு அப்பா, அம்மாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, ஜேர்மனி நித்திச்சித்தப்பா, கோமதிச் சித்தப்பா, டோகா கண்ணன் மாமா, சசிஅத்தை, மச்சான் திரோக், பிரான்ஸ் சதீஸ் மாமா, லண்டன் சுதன் மாமா, கொழும்பு சாந்தன் மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர்க் கந்தன் அருள் பெற்று பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

61, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(34603) (24-34-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரசியலை கலக்கும் விவரணத் திரைப்படம் 'பரன்ஹீட் 9/11'

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி காலைவேளை,

அமெரிக்காவின் 'புளோரிடா' மாநிலத்தில் உள்ள பாடசாலையொன்றின் மாணவர்களுடன இணைந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சிறுவர்களுக்கான புத்தகமொன்றினை வாசிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்.

பரபரப்புடன் வேகமாக அவ்வறையினுள் பிரவேசித்த அதிகாரியொருவர் ஜனாதிபதியிடம் தகவலொன்றை வெளியிடுகிறார்.

உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது விமானமொன்று மோதியதில் கட்டடம் தீப்பற்றி எரிகிறது. இதுவே அவர் தெரிவித்த தகவல்.

இத்தகவலால் கவனம் கலைந்த ஜனாதிபதி புஷ் தொடர்ந்து ஏழு நிமிடங்கள் வரை தமது இருக்கையிலேயே மௌனமாக அமர்ந்திருக்கிறார். மீண்டும் பரபரப்புடன் அவசர அவசரமாக அந்த அதிகாரி அறையினுள் பிரவேசிக்கிறார். ஜனாதிபதியின் அருகில் சென்று அவரது காதுக்குள் மீண்டும் கிசுகிசுக்கிறார்.

மற்றொரு விமானம் உலக வர்த்தக மையக கட்டடத்தின் மீது மோதியுள்ளது.

இச்செய்தியைக் கேட்டும் கூட ஜனாதிபதி புஷ் எவ்வித பரபரப்பும் அடையவில்லை. பதிலாக மேலும் மூன்று நிமிடங்கள் வரை அம் மாணவர்களுடன் தனது பொழுதைக் கழிக்கிறார்.

**முடங்கிக் கிடந்த ஒளிநாடா**

நாட்டின் அதிமுக்கிய அரச கட்டடங்களின் மீது அடுத்தடுத்து பயங்கரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டு சேதம் விளைவித்த அந்த வேளையில் வேகமாகச் செயற்பட்டு உடனடியாகத் தமது ஆலோசகர்களைக் கலந்தாலோசித்து பொது மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தமது பெரும் பொறுப்பினை மறந்து ஜனாதிபதி புஷ் பரபரப்பு எதுவுமின்றி மௌனமாக அமர்ந்திருந்த அக்காட்சிகள் 'வீடியோ' ஒளி நாடாவில் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்தன. அப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியரொருவர் நீண்ட காலமாக அந்த ஒளிப்பதிவு நாடாவை வைத்திருந்தார்.

அமெரிக்க ஊடகவியலாளர்களின் முயற்சிகளால் அந்த ஒளிப்பதிவு நாடாவில் பதிவாகியிருந்த காட்சிகள் பகிரங்கப்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக விவரணத் திரைப்படம் ஒன்று தயாரிக்கபபட்டுள்ளது. இதுவே அமெரிக்க அரசியலில் புயலைக் கிளப்பியுள்ளது.

'ஹான்ஸ்' திரைப்பட விழாவில் சிறந்த விவரணத் திரைப்பட நெறிப்படுத்துலுக்கான விருதை வென்றெடுத்த மைக்கல் மூர் என்பவரின் நெறிப்படுத்தலில் வெளிவந்துள்ள 'பாரான ஹட் 9/11' என்ற அரசியல் விவரணத் திரைப் படமே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்கால முக்கிய அரசியல் சம்பவங்கள் பலவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்துத் தொடர்புகள் அறுபடாத வகையில் பின்னப்பட்டுள்ள இவ்விவரணத் திரைப்படம், 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதியன்று அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கரவாத விமானத் தாக்குதல் சம்பவத்தையே கதையின் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அப்பதவியை வகிப்பதற்கு முற்றிலும் தகுதியற்றவரென நிறுவ முயல்வதே இவ் விவரணத் திரைப்படத் தயாரிப்பின் முக்கிய குறிக்கோளாக அமைந்துள்ளதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

உலகத்து அரசியல் தில்லுமுல்லுகளைப் பொதுமக்கள் அறியச் செய்யும் நோக்கில் இத திரைப்பட இயக்குநர் மைக்கல் மூர் விவாதத்துக்குரிய முக்கிய அரசியல் சம்பவங்கள் சிலவற்றைத் தொகுத்துத் திரைப்படமாக உருவாக்கியுள்ளார்.

**பின்லேடனின் உறவுடன் ஆரம்பம்**

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கும், ஒஸாமா பின்லேடனின் குடும்பத்துக்கும் இடையே நிலவிய நெருக்கமான தொடர்புகளை விவரிக்கும் காட்சிகளுடன் திரைப்படம் ஆரம்பிக்கின்றது.

இன்றைய அமெரிக்க ஜனாதிபதி புஷ் 1977 ஆம் ஆண்டில் ஆபஸ்ரோ எனர்ஜி இன்கோபரேஷன் (Arbusto Energy Incorporation) என்ற பெயரில் ஒஸாமா பின்லேடனின் மூத்த சகோதரரான சலீம் பின்லேடனுடன் கூட்டுச் சேர்ந்து எண்ணெய்க் கிணறு அகழும் நிறுவனமொன்றை உருவாக்கியுள்ளார்.

அந்தவேளை முதல் இன்றுவரை ஜனாதிபதி புஷ்ஷின் குடும்பத்துக்கும் சவூதி அரேபிய பின்லாடன் குடும்பத்துக்குமிடையே நெருங்கிய தொடர்பு நிலவி வந்துள்ளது. இவ்வாறு விவரித்துச் செல்லும் சில காட்சிகள் இத் திரைப்படத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து வரும் காட்சியை செப்ரெம்பர் 11ஆம் திகதிய தாக்குதல் சம்பவத்தை - அதன் தாக்கத்தைப் - பார்வையாளர்களின் மனதில் பதியச் செய்யும் விதத்தில் புதியதோர் உத்தியைக் கையாண்டு இயக்குநர் மைக்கல்மூர் படமாக்கியுள்ளார். திரையில் காட்சிகள் எதுவும் காண்பிக்கப்படாது. வெறும் இருட்டாகவே தோற்றமளிக்கிறது. அதேசமயம் குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற வேளையில் உலக வர்த்தக மையக் கட்டடம் அமைந்திருந்த லோவர் மன்ஹட்டன் பிரதேசத்தில் வெளியான அசாதாரணை பேரொலிச் சத்தங்கள் மட்டுமே பின்னணியில் ஒலிக்கின்றன. படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையாளர்கள் சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் தாமும் அவ்விடத்தில் இருந்ததாக உணரச் செய்யும் மன நிலையை உருவாக்கும் உத்தியில் இயக்குநர் இதன்மூலம் வெற்றியடைகிறார்.

இப்போது திரையில் காட்சி மாறுகிறது.

உலக வர்த்தக மையக் கட்டடம் மீதான விமானத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அமெரிக்க விமான சேவைகள் யாவும் உடனடியாக இடை நிறுத்தப்படுவதாக அமெரிக்க அரசு சார்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகிறது.


ஆனால், அமெரிக்காவின் விமான நிலையமொன்றிலிருந்து இரகசியமான வகையில் விமானமொன்று சவூதி அரேபியா நோக்கித் தனது பயணத்தை ஆரம்பிக்கிறது. விசேடமாகத் தெரிவுசெய்யப்பட்ட விமானியொருவர் விமானத்தை இயக்குகிறார். விமானத்தில் ஒட்டுமொத்தமாக 24 பயணிகள் தத்தமது இருக்கைகளில் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் யாராயிருக்கலாம் எனத் தெரிந்துகொள்ளும் ஆவல் பார்வையாளர்களைப் பரபரப்படையச் செய்கிறது.

**விமானத்தின் பயணிகள் யார்?**

இதுவரைகாலமும் அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் வசித்துவந்த ஒஸாமா பின்லேடனின் குடும்பத்தின் நெருங்கிய முக்கிய உறுப்பினர்களே அந்த 24 பயணிகளும் என்ற தகவல வெளியாகும் வேளையில் பார்வையாளர்களின் முகங்கள் பலதரப்பட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. அவர்கள் மத்தியில் சலசலப்பு கருத்துவெளிப்பாடுகள்;



குறிப்பாக உலக வர்த்தக மையக் கட்டடம மீதான விமானத்தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரியாக ஒஸாமா பின்லேடன் சந்தேகிக்கப்பட்ட நிலையில், அவரைப் பற்றிய முக்கிய தகவல்களைத் தெரிந்துவைத்துள்ள அவரது நெருஙகிய குடும்ப உறுப்பினர்கள் பாதுகாப்பாக அமெரிக்காவிலிருந்து வெளியேற ஜனாதிபதி புஷ் ஒழுங்குகள் மேற்கொண்டு உதவிய செயல்



நியாயமான தொன்றுதானா? இச்சம்பவத்தின் பின்னணியில் மறைந்துள்ள மர்மம்தானென்ன?

விறுவிறுப்பாக நகர்ந்து சென்ற இத்திரைப் பட ஓட்டத்தை மேற்குறித்த கேள்விகளுடன் நிறுத்திக் கொள்கிறார் இயக்குநர் மைக்கல் மூர்.

அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதானவிமானத் தாக்குதலுக்கு காரணமானவர் ஒஸாமா பின்லேடனே எனத் தெரிவித்ததுடன், அவர் மறைந்து வாழும் ஆப்கானிஸ்தானில் அவரைத் தேடிக் கண்டுபிடித்துக் கைது செய்யப் போவதாகப் பொய்க் காரணம் கூறிக் கொண்டு ஆப்கானிஸ்தான்மீது தாக்குதல் தொடுத்த ஜனாதிபதி புஷ்ஷின் உண்மையான நோக்கம் ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள எண்ணெய் எடுத்துச்செல்லும் நீண்ட குழாய் வழி வசதியை அழித்தொழித்து விடுவதே என்பதைப் பார்வையாளர்களுக்குப் புரிய வைகக்கும் முயற்சியாக ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தேடுதல் என்ற போர்வையில் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கை விவரங்களை விரிவாகப் பார்வையாளர்களின் பார்வைக்குக் காட்டுகிறார் இயக்குநர் மைக்கல் மூர்.

மைக்கல் மூரின் 'கமரா' இப்போது ஆப்கானிஸ தானைவிட்டு ஈராக் பக்கம் திரும்புகிறது.

ஆப்கானிஸ்தானின் எண்ணெய் எடுத்துச செல்லும் நீண்ட குழாய் வழி வசதியை நாசமாக்கியதன் மூலம் தமது எண்ணெய் வர்த்தகப் போட்டிக்கான தடையை நீக்கியாயிற்று.

**ஐ.நா.ஆட்சேபனை**

ஐ.நா. சபையின் ஆட்சேபனையையும் மீறி ஈராக் மீது போர் தொடுத்தது மட்டுமன்றி, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனைக் கைது செய்ததுடன் அவருக்குத் தண்டனை வழங்கவும் திட்டம் தீட்டிச் செயற்பட்டு வரும் ஜனாதிபதி புஷ், மூவாயிரத்துக்கும் அதிகமான அப்பாவி அமெரிக்கப் பொதுமக்கள் ஒரு சில நிமிட நேர இடைவெளியில் உயிரிழக்கக் காரணமான ஒஸாமா பின்லேடனைக் கண்டுபிடித்துக் கைதுசெய்வதற்கு இதுவரை உருப்படியான நடவடிக்கையோ, அக்கறையோ எடுத்துக் கொள்ளாததேன்? என்று கேள்வி எழுப்புவதுடன் [illegible] ஆரம்பிக்கிறார் [illegible]

மைக்கல் மூரின் 'கமரா' இப்போது ஈராக் நாட்டின் வீதிகளில் நகர்கிறது. பக்தாத் நகர வீதிகளில் விளையாடித் திரியும் சிறுவர்களை படம் பிடித்துக் காட்டும் 'கமரா' தொடர்ந்து அமெரிக்கப் படைகளின் கணமூடித்தனமான தாக்குதலில் படுகாயமடைந்த சிறுவனொருவனை நம் கண்முன் நிறுத்துகிறது. தொடரும் காட்சிகளில் அமெரிக்கப் படையினரின் விமானத தாக்குதலால் தரை மட்டமாகி விட்ட தமது வீட்டின் முன்னால் வாய் விட்டழும் ஈராக்கியப் பெண்மணியொருத்தியை காட்டியதுடன் அமெரிக்கா பக்கம் திரும்புகிறது.

**அமெரிக்கப் பெண்மணி**

'லிலா லிப்ஸ் கொம்ப' எனப் பெயருடைய பெண்மணி அமெரிக்க நாட்டவர். 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் சதாம் ஹுசைன் ஆதரவுப் படைகளின் தாக்குதலில் சேதமுற்ற 'பிளாக் கொக்' ரக உலங்குவானூர்தியில் பயணஞ்செய்த அமெரிக்க இராணு அதிகாரி மைக்கல் பெடர்சனின் தாயார் அவர். இடம்பெற்ற தாக்குதலில் மைக்கல் பெடர்சன் உயிரிழக்க நேர்ந்தமை மேலதிகத் தகவல். ஈராக்கிய யுத்தத்தில் பங்குகொண்டதன் காரணமாக உயிரிழந்த தனது மகனை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறியழும் அந்த அமெரிக்கத் தாயின் சோகத்தைப் பார்வையாளர்களின் கண்முன் தத்ரூபமாகக் கொண்டுவந்து நிறுத்து கிறது மைக்கல் மூரின் 'கமரா'

இவ்விவரணத் திரைப்படத்தில் தோன்றும் இந்த அமெரிக்கத் தாயை நேரில் சந்தித்த 'யு.எஸ்.ஏ. ருடே' பத்திரிகையின் செய்தியாளரிடம் யுத்தத்தின் கொடுமையை உலகத்து மக்களுக்கு உணர்த்துவதே இவ்விவரணத் திரைப்படத்தின் நோக்கமென மைக்கல் மூர் என்னிடம் தெரிவித்தார். 'ஈராக்' ஆக இருப்பினும் சரி அல்லது அமெரிக்காவாக இருப்பினும் சரி, தமது பிள்ளைகளை யுத்தத்துக்குப் பறிகொடுக்கும் தாய்மாரின் துயரத்தை நான் உணர்கிறேன். இதனையே நான் மைக்கல் மூரிடமும் தெரிவித்தேன்" எனக் கூறியுள்ளார்.

இந்த விவரணத் திரைப்படம் குறித்த தன அபிப்பிராயத்தை வெளியிட்ட ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தந்தையும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான ஜோர்ஜ் புஷ "இந்தத் திரைப்படத்தின் மூலம் "நாட்டின் ஜனாதிபதியின் நற்பெயருக்கு மைக்கல் மூர் களங்கம் ஏற்படுத்தியுள்ளார்" எனத் தெரிவித்துள்ளார்.

இவரது கருத்துக்கு ஒத்த வகையில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷின் அரசியல் நடவடிக்கைகளைக் கண்மூடித்தனமாக ஆதரிபபோரும் அமெரிக்காவில் கணிசமாகக் காணப் படுகின்றனர்.

மூவி அமெரிக்கா போவார்ட் (Movie America Forward) எனப் பெயர் கொண்ட சோசலிசவாத அமைப்பு, அமெரிக்க மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள திரையரங்க உரிமையாளர்களுக்கு பெருமளவிலான கடிதங்களை அனுப்பி 'பாரன் ஹைட9/11' என்ற இவ்விவரணத் திரைப்படத்தை அவர்களது திரையரங்குகளில் காண்பிக்க வேண்டா மெனக் கேட்டுக்கொண்டுள்ளது. அதே சமயம் இந்நடவடிக்கைக்கு எதிராக ஏட்டிக்குப் போட்டி என்ற விதத்தில் 'மூவ் ஒன் பாக்' (Move on Pac) என்ற பெயருடைய [illegible] ஆதரவு அமைபபொன்று அவ் [illegible] தொகைக் கடிதங்களை அனுப்பி வைத்து இத்திரைப் படத்தைத் திரையிடுமாறு திரையரங்குகளின் உரிமையாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.



மைக்கேல் மூர்

இவற்றினிடையே இத்திரைப்படம் தொடர்பான விளம்பரங்களில் ஜனாதிபதி புஷ்ஷின் உருவப்படம் சேர்க்கப்படுவது தேர்தல் தொடர்பான சட்ட விதிகளை மீறும் செயலாகுமெனத் தெரிவித்து "சிற்றிசன்ஸ் யுனைட்டெட்" (Citizens United) என்ற பழைமைவாத அமைப்பொன்று தேர்தல் ஆணையாளரிடம் ஆட்சேபனை மனுவொன்றைக் கையளித்தது. இதன் பயனாக கடந்த ஜூலை 30 ஆம் திகதிக்குப் பின்னர் இத்திரைப்படம் தொடர்பான விளம்பரங்களில் அமெரிக்க ஜனாதிபதியின் படத்தைச் சேர்க்காது பார்த்துக்கொள்ளுமாறு அமெரிக்கத் தேர்தல் ஆணைக்குழு பட இயக்குநர் மைக்கல் மூருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

'வால்ட் டிஸ்னி' என்ற அமெரிக்க திரைப் படத் தயாரிப்புக் கூட்டு நிறுவனங்களின் உப நிறுவனமான 'மிரமக்ஸ் பிக்சாஸ்' என்ற நிறுவனமே இப்படத் தயாரிப்புக்காக 60 லட்சம டொலர்களை முதலீடுசெய்திருந்தது. இந்நிறுவனம் 'பாரன் ஹீட் 9/11' என்ற இத்திரைப் படத்தைப் பொதுமக்களுக்குத் திரையிடுவதைத் தற்போது நிறுத்திவைத்துள்ளது.

இதனால், இயக்குநர் மைக்கல்மூர் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. படத்தைத் தயாரித்த நிறுவனம் அதனைப் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடாது நிறுத்திவைக்க முடிவுசெய்ததன் பின்னணியில் பல காரணங்கள் இருப்பதாக தோன்றுகின்றது. புளோரிடா மாநில ஆளுநரும், வோலட் டிஸ்னி திரைப்படத்தயாரிப்பு நிறுவனத்தின் நிர்வாகியுமாகிய ஜாப் புஷ், ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் சகோதரராவார். பல கோடி டொலர்கள சொத்துக்கு அதிபதியான ஜாப் புஷ் அரச உயர் மட்டங்களில் செல்வாக்கு மிக்கவர். 'பாரன் ஹீட் 9/11" என்ற சர்ச்சைக்குரிய இத் திரைப்படம் 'வால் டிஸ்னி' நிறுவனத்தின் பெயரில் வெளியிடப்படுமானால், பல தரப்புக்களிடமிருந்து, பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுமென இந்நிறுவனம் கருதியதால் இத் திரைப்படத்தை வெளியிடுவதற்குத் தயக்கம் காட்டியது.

ஆனால், கடைசியில் 'லயன்ஸ் கேற்' (Lions Gate) என்ற அமெரிக்கத் திரைப்பட விநியோக நிறுவனம் இத்திரைப்படத்தை வெளியிடுவதற்கான உரிமையைப் பெற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் இறுதிவரை நான்கு கோடி டொலர்கள் பெறுமதியாள நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையாகியுள்ளன. இது இவ்வித விரணத் திரைப்படமொன்றுக்காக நுழைவுச் சீட்டு விற்பனையில் இதுவரை காலமும் ஈட்டப்படாத மிகப் பெரிய தொகையாகும்.

இவையாவற்றையும் கருத்தில் எடுத்து தான உருவாக்கிய 'பாரன் ஹீட் 9/11' திரைப்படம் குறித்து மைக்கல் மூர் மேற்கொண்ட மதிப்பீட்டின் முடிவில் "ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் போன்றதொரு தலைவர் வெள்ளை மாளிகையில் வாசம் செய்யத் தகுதியற்றவர். எந்த வகையிலாவது இத்தகைய இயல்புடன் இயங்கும் திறமையீனமான ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவதே எனது எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இத்திரைப்படத்தின் மூலம் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் செல்வாக்குக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என ஜனாதிபதிக்கு நெருக்கமான சிலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஆனால், அமெரிக்காவின் பிரபல அரசியல் விமர்சகர்களில் ஒருவரான கலாநிதி ஜாக் பிட்ணி இத்திரைப்படம் குறித்து கருத்து வெளியிடுகையில் இத் திரைப் படத்தைப் பார்ப்பதன் மூலம் ஜனாதிபதி புஷ்ஷின செயற்பாடுகளை விரும்பாதவர்கள் அவர்மீது மேலும் வைராக்கியம் கொள்ள ஏதுவாகும் எனத் தெரிவித்துள்ளார். ★

உலக வலம்

நாடோடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சூசைப்பிள்ளை லூர்த்தம்மா**

தோற்றம் 23-04-1929 | மறைவு 31-07-2003

ஓராண்டு இன்று! நாளைமுதல்
ஈராண்டின் தொடக்கம்
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
அத்தனை தினமும் உன் நினைவில்

211, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் உறவினர்.

34749 (40-12-15)


Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7295174 முதல் 7307722 வரை
சீட்டிழுப்பு இல. 54 திகதி 29-07-2004

வெற்றி எண்கள் **3 7 9 0 3 2** சுப்பர் எண் **09**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,38,76,375/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,38,76,375/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 112 | 5,000/- | 5,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,103 | 500/- | 5,51,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,044 | 50/- | 5,52,200/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,09,425 | 10/- | 10,94,250/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 13 | 5,000/- | 65,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 1,000/- | 1,13,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,105 | 100/- | 1,10,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,941 | 20/- | 2,18,820/- |
| மொத்தம் | 1,33,867 | | 57,15,270/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 57,15,270/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,41,83,400/-**

தொடர் இல. 6333951 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 02 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செண்ட் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7298405-0-57
7300401-0-02
7296863-3-83
7305766-1-46
7299601-2-87


## கண்ணீர் அஞ்சலி

மல்வம், உடுவில் வாழ் எம் சகோதர பணியாளர்
**திருமதி மன்ரோபபிறோஸ்ரலின்**
**தாவீது** அவர்களின் அன்பு நிறை அப்பப்பா
**தானியேல் இராயப்பு**

அவர்கள் நேற்றையதினம் மறைவுக்குள்ளான துயரில் பங்கெடுத்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர், நலன்புரிச்சங்கம்
பணிப்பாளர்கள் யாழ்.மாவட்ட
சித்த ம.உ.வி.வை.சே.கூட்டுறவுச் சங்கம்.

(34745)(40-12-15)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகலிங்கம் மனோன்மணி



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கட்டட ஒப்பந்தகாரர் காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி மனோனமணி 28.07.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமலர், தங்கராணி, சந்திரராணி, கந்தசாமி, தெய்வேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் சிவானுஜா, சுகீகரன் (நெதர்லாந்து), பாஸ்கரன் (ஜேர்மனி), அனுஸா (ஆஸ்திரேலியா), சுயானுஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரசேகரன், மாலதி, வரதலிங்கம், புஸ்பாகரன் ஆகியோரின் மாமியாரும் கபில்ராஜ், கமல்ராஜ், கஜலக்ஷன், மிதுஷிக்கா, சினேக்கா, கஜாநந், சுயாநந், ப்ரீத்தி, கரிசாந், கௌசிகன், சுஜீவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் தியாகராஜா, இரத்தினம், மனோகரி, சந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.30 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்

(34746)(35-21-12-15)

# அறநெறிப் பாடசாலைகளின் இந்து சமய இறுதிப் பரீட்சை

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான 2004 ஆம் ஆண்டுக்கான இந்து சமயம் இறுதிப பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான சுற்றறிக்கை பரீட்சை ஆணையாளரால் அனைத்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் உரிய விண்ணப்பப் படிவங்களுடன் அனுப்பப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் ஓகஸ்ட் 17 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, தேசிய மதிப்பீட்டலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை' என்னும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். முதற்றடவையாகத் தோற்றுபவர்களுக்கு பரீட்சைக் கட்டணம் இலவசம். ஏனையவர்கள் 60 ரூபா செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-110)


மீண்டும் சாவகச்சேரியில்....!
லக்ஷறி பல் மூக்குக் கண்ணாடி அகம்
- சிறந்த முறையில் சங்குப்பற்களைக் கட்டிட
- மிதப்புப் பற்களுக்கு இலகு முறையில் கிளிப் பொருத்தி சீர் செய்திட
- நவீன வடிவமைப்புடைய மூக்குக் கண்ணாடிகளை விரைவில் பெற்றிட
- இலவச கண் பரிசோதனை செய்திட

உடனே விரையுங்கள்:
லக்ஷறி பல் மூக்குக் கண்ணாடி அகம்
18, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
☎ 0777 222 534
(36654-12-15-40)

உடன் தேவை

மகாத்மா காந்தி வீதியில் அமைந்துள்ள புவிதா கிறீம் கவுஸ் ஸ்தாபனத்திற்கு உணவு பரிமாறுவோர், வாகன சாரதி உடன் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும் நேரில் வரவும்.

புவிதா கிறீம் கவுஸ்
(யாழ்.ஐக்கிய வியாபார சங்கத்திற்குஎதிர்ப்பக்கமாக)
மகாத்மாகாந்தி வீதி, யாழ்ப்பாணம்
(34744) (35-21-12-15)

வீடு விற்பனைக்கு

இல.15/8, ஒட்டுமடம், செபஸ்தியார் வீதியில் 5பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
த.கனகரத்தினம்,
இல.234/6, செபஸ்தியார் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
(34740)(35-12-15)

House wanted for rent
வீடு வாடகைக்குத் தேவை

UNDP இன அலுவலகப் பாவனைக்கு வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

121, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி (222 2277, 222 5776) இன் மூலமோ அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளவும். (C-36651)(29)

அழகுக் கலையில் ஆர்வமுள்ள பெண்கள் கவனிக்கவும்!

உங்களை நீங்களே அழகுபடுத்தவும்
நீங்கள் மற்றவர்களை அழகுபடுத்தவும்
நாங்கள் உங்களுக்கு பயிற்றுவிப்போம

கொழும்பு MOON Beauty Care உரிமையாளரும், நடன ஆசிரியையும் ஆன திருமதி அகிலா அவர்களால் நவீன முறையிலான அணுகுமுறைகளுடன பயிற்சியளிக்கப்படுவதுடன் அழகுக்கலை சிகிச்சைகளுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

★ Advance, Diploma Course களுக்கு புறம்பாக Facials மட்டும் படிக்க விரும்புவோரும், Facials செய்ய விரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.

★ யாழ்ப்பாணத்திலும் வடமராட்சியிலும் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

★ தென்மராட்சியில் அழகுக்கலை சம்பந்தமான இலவசக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவிருக்கின்றது.

மேலதிக விவரங்களுக்கு
021-226 3365
0777 570138
(34742) (29)




WALK IN INTERVIEW (நேர்முகத்தேர்வு)

We are looking for capable persons for the following Posts.

1. ASSISTANT ACCOUNTANT
(Degree or professional qualifications with 2 years working Experience)
2. ELECTRICIAN
(3 Phase - Super market Freezer, A/C, Generators and etc., 2 Years Working Experience)
3. CASHIERS - (Cash Counter)
4. COMPUTER OPERATORS
(G.C.E A/L and above with Computer Knowledge)

Interview will be held on 01st August 2004 at 10.00 a.m. at our under mention address.

Note: Please bring with you the curriculum vita and relevant documents.

Administrative Officer
ANNAI NAGAA FOOD CITY
175 K.K.S. ROAD, JAFFNA.
T.P: 021-2225515 (C/36653)


### போட்டிப் பரீட்சை

இலங்கை இரசாயனவியல் கழகத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் ஆஸ்திரேலியத் தேசிய இரசாயனவியல் அறிவுப் போட்டிப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (10)

### சான்றிதழ்கள் கிடைத்தன

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவைமூலம் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சையை நடத்தியுள்ளது. 2003 ஆம் ஆண்டு நடத்திய மேற்படி பரீட்சைக்கான சான்றிதழ்கள் அந்தந்த அறநெறிப் பாடசாலைகளுக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-110)

### கௌரவிப்பு

சரசாலை தெற்கு மகிழ் நின்றவளவு இராமாவில் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகக் கிரியைகளைச் சிறப்புற நடத்திய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள், யாக சமரட்சகராக பணியாற்றிய பிரம்மஸ்ரீ ச.லோகேஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ இரமணிதர சர்மா ஆகியோரை ஆலய பரிபாலன சபையினர் இன்று முற்பகல் 11.30 மணிக்கு பாராட்டிக் கௌரவிக்க உள்ளனர். (எ-117)

### விளையாட்டு நிகழ்வுகள்

விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் வடக்கு - கிழக்கு மாகாண மட்ட கபடிப போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இந்தக் கபடிப் போட்டியில கலந்து கொள்வதற்காக 8 மாவட்டங்களையும் சேர்ந்த கபடி அணியினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (10-190)

★ ★ ★

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் சுப்பர்லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.லீக் அணிக்கும் வவுனியா லீக் அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நாளை மாலை 4 மணிக்கு யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (10-190)

★ ★ ★

ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பாடசாலை மட்டத்திலான சைக்கிள் மரதன் ஓட்டப்போட்டிகள் இன்று காலை 6 மணிக்கு சுன்னாகக் கிளையின் முன்பாக ஆரம்பமாகவுள்ளன. (10-201)

★ ★ ★

அடுத்த மாதம் 7, 8ஆம் திகதிகளில் 16 பாலர் பாடசாலைகளை இணைத்து யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (10-190-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார இறுதியில் நடப்பவை

வலிகாமம் தெற்கு,ஜூலை31
உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டு விழாவில், வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் சி. திருவாகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கமும் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இயக்குநர் சு.ஜெயராசாவும் கலந்துகொள்கின்றனர். (எ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
ஏ.ஓ.எம்.ஏ. கராத்தேக் கழகத்தைச் சேர்ந்த சகல கறுப்புப் பட்டி, மண்ணிறப் பட்டி மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கழக முன்றிலில் நடைபெறவுள்ளது. (எ-201)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூலை31
வலி.தெற்கு - சுன்னாகம் பிரதேச சபையினால் நடத்தப்பட்டுவரும் உள்ளூராட்சி வாரத்தின் இறுதிநாள் கலைவிழா இன்று சனிக்கிழமை உடுவில் உப அலுவலக திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

(எ-152-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ். கல்வி வலய தமிழ்த்தினப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை ஆகியவற்றிலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-13-201)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூலை31
உடுவில் கல்விக் கோட்டத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்படும், கோட்டப் பாடசாலைகளில் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான 10 ஆவது பொதுப் பரீட்சை இன்று காலை நடைபெறவுள்ளது. (எ-152-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ்ப்பாணத்தில் இயங்கும் இங்கிலாந்து மொழிப் பாடசாலை (London Langue School) இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இலவச ஆங்கிலக் கண்காட்சியை நடத்தவுள்ளது.

மேற்படி மூன்று தினங்களிலும் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரையும் பிற்பகல்2 மணிமுதல்5 மணிவரையும் இக்காட்சி நடைபெறும்.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
இந்து சமயப் பேரவையினர் நடத்தும் இலங்கை சின்மயா மிஷன் இந்துசமய விழிப்புணர்வு வாரம் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பலாலி வீதி, கந்தர்மடத்திலுள்ள இந்து சமயப் பேரவையின் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சுவாமி ரமண சைதன்யா கலந்துகொள்ளவுள்ளார். அடுத்த மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை பேரவையினர் நடத்தவுள்ள "இந்து விழிப்புணர்வு வாரம்" தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் இந்துசமய ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் கேட்டுள்ளார். (10-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ்.பல்கலைக் கழகக் கலைப்பீடத்தின் கலைவார கலை, கலாசார நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரித் தினவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 7.30 மணிக்குத் திருப்பலியுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (எ-201)

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ். சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் மாதாந்த கருத்தரங்குத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 'இலங்கை இனப்பிரச்சினையில் வெளிநாடுகளின் இராஜதந்திர தலையீடுகள்' என்னும் தலைப்பில் யாழ். ஆரியகுளம் சந்திக்கு அருகிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் கருத்தரங்கம் ஒன்று நடைபெறவுள்ளது. (எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
ஸ்ரீ சாரதா தேவியாரின் 150 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமித்தியால் நடத்தப்படும் மாவட்ட மட்டப் பேச்சுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளிலும் நடத்தப்பட்ட போட்டிகளில முதலிடம் பெற்ற மாணவர்கள் இதில் பங்குபற்றுவர். (எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஓவியக் கண்காட்சியின் இரண்டாவது வாரத்தை முன்னிட்டு, யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை இறுதி வருட மாணவர்களால் 'ஓவிய ஆடல்' என்னும் சிறப்பு நிகழ்வொன்று இன்று மாலை 4 மணிக்கு கந்தர்மடம் பிரெஞ் நட்புறவுக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

(எ-6)

★ ★ ★

வடமராட்சி,ஜூலை31
யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி கல்யாண மண்டபத்தில் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பேராளர்கள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டு உரையாற்றுவர். (எ-173-30-201)

★ ★ ★

அச்சுவேலி,ஜூலை31
இந்தியாவிலிருந்து வருகை தரும் வைத்திய நிபுணர் டாக்டர் ஸ்ரீநிவாசன் ரஞ்சனால் ரிஷி காளான் பற்றிய விசேட கருத்தரங்குகள் குடாநாட்டின் பல பாகங்களிலும் நடத்தப்படவுள்ளன.

இதன்படி, இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோயில் பர்வதபத்தினி மண்டபத்திலும், பிற்பகல் 3.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலும் மாலை 6.30 மணிக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதைய சங்கத்திலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும் மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்திலும் மேற்படி கருத்தரங்கு நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம் மற்றும் அப்பகுதிச் சனசமூக நிலையங்களுடன் இணைந்து இலங்கை ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கம் நடத்தும் ஆடிப்பூரணை விழாவும், இலவச மருத்துவ முகாமும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

பூரணை விழா இன்று நண்பகல் 12 மணிக்கு சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயத்திலும் இலவச மருத்துவமுகாம் நிகழ்வுகள் இன்று காலை 9 மணி தொடக்கம் சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பாடசாலையில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்படும். (எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
நாட்டிய கலாமணி அகல்யா சுந்தரம் அவர்களின் மாணவியும் திரு. திருமதி அரியநாயகம் தம்பதியின் புதல்வியுமான செல்வி டயானார்த்தி அரியநாயகத்தின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் நிகழும் மேற்படி நிகழ்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தே.இராஜரட்ணம் மற்றும் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரா ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
தொழில்நுட்ப வல்லுநர்களால் இன்று சனிக்கிழமை காலை இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தில் எல்.எம்.எல்.பிரீடம் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளது. (எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணிக்கான நேயர்மன்றம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள பாதுகாவலன் பணிமனை மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் சகல அங்கத்தவர்களுக்குமான மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் ஷெடிக் பர்மார்க்கின் நெறியாள்கையில் உருவான ஒஸாமா என்னும் ஈரானியத் திரைப்படம் ஆங்கிலத்துணைத் தலைப்புக்களுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

அத்துடன். இணைந்து மௌனம்பேசும் (The Silent Speak) என்னும் விவரணச் சித்திரம் ஒன்றும் காண்பிக்கப்படும்.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ். பல்கலைக்கழக வணிகமாணவர் மன்றத்தால் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டுவரும் புத்தகக் கண்காட்சியும் மலிவுவிற்பனையும் நாளை ஞாயிற்றுக்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளன.

(எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய்ப் பொதுநூலக அபிவிருத்திச் சபையின் கலை கலாசாரப் பிரிவினரால் நடத்தப்படும் பௌர்ணமி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நூலக அபிவிருத்திச் சபைத் தலைவர் கு.நடராசா தலைமையில் சாவகச்சேரிப் பிரதேச சபையின் மேல்மாடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் க.சந்திரசேகராவும் சிறப்பு விருந்தினராக திருமதி பூங்கோதை ஸ்ரீரஞ்சனும், கௌரவ விருந்தினராக தென்மராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.இரத்தினமும் கலந்துகொள்வர்.

(எ-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் நயினை நாகபூஷணி அம்மன மேல் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய இசை மாலை வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் வைத்திய கலாநிதி தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறும். (4)

★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
மானிப்பாய் மக்கள் வங்கியின் காசாளர் சுந்தரம் பஞ்சலிங்கத்தின் படுகொலையைக் கண்டித்தும் அவரை நினைவுகூர்ந்தும் நாளை காலை 9 மணிக்கு யாழ் சன்மார்க்க வித்தியாலயத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. (4)

★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை31
உலோலசிட்டி விநாயகர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு சங்கத் தலைவர் இ.செல்வரத்தினம் தலைமையில் அராலி மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. (4)

## சாட்சிக்குப் பிடியாணை

யாழ்ப்பாணம்,ஜூலை31
யாழ். நீராவியடியில் கடந்த வருடம் நடந்த கொலை தொடர்பான வழக்கில் தலைமறைவாகியுள்ள ஏழாவது சாட்சிக்கு யாழ். மேலதிக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நீராவியடியில் வைத்து அஜந்தீப் என்ற இளைஞர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் இடம்பெற்றுவருகின்றது.

மூன்று சந்தேகநபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு பலரின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன. வழக்கில் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியான காண்டீபன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகியிருக்கின்றார்.

இவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு யாழ். பொலீஸ் குற்றத்தடுப்புப் பிரிவு ஊடாக பிடியாணையை யாழ்.மேலதிக நீதிவான் பிறப்பித்துள்ளார்.

(ஒ-3)

## ஆஜராகாதவருக்கு எதிராக மேல் நீதிமன்று நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை31
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் பகிரங்கப்பிடியாணையை நேற்றுப் பிறப்பித்துள்ளது.

2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருநெல்வேலிப் பகுதியில் சட்ட அங்கீகாரம் இன்றி தீங்கு விளைவிக்கும் வெடிமருந்துப் பொருள்களை உடைமையாக வைத்திருந்த குற்றச்சாட்டில் நித்தியானந்தன் மயூரதன் என்பவர் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரினால் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அந்த வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. ஆனால் அது சம்பந்தமான நபர் மன்றில் ஆஜராகவில்லை.

எதிராளி சார்பாக முன்னைய தவணைகளில் ஆஜரான சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு, தனக்கு குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்றும்-

இவ்வழக்கில் இருந்து தான் விலக்கிக் கொள்கிறார் என்றும் மன்றில் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி எதிராளிக்குப் பிடியாணை பிறப்பித்தார். அத்துடன், அவருக்கு பிணையாளியாக நின்ற இருவரையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு கட்டளையிட்டதுடன் வழக்கு விசாரணைகளை அத்தினத்திற்கு ஒத்திவைத்தார். (ஒ-5)


**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு திகதி பிற்போடப்பட்டுள்ளது**


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் பீடத்தின் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக 01.08.2004 நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 31.08.2004 இற்கு பிற்போடப்பட்டுள்ளது.**

(சி-36661) **விவசாயபீட மாணவர் ஒன்றியம்.**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்துப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(நயினாதீவு- ஆனைக்கோட்டை)



நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை நேற்று (30.07.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சுந்தராம்பாள், சுந்தரேஸ்வரி, இந்துமதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரந்தாமன், முத்துலிங்கம், நடேசமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், சுபாஜினி, பவானந்தன் (லண்டன்), திலீபன், சுவர்ணா, மஞ்சுளா (ஜேர்மனி), அமரர் நிரஞ்சலா, நிருபா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், கரன், சுஜி, பபி, துஷா, ஜீவனா, வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. முத்துலிங்கம் (மருமகன்)
ப. திலீபன் (பேரன்), நா. சாந்தன் (பேரன்).

*ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.* (34753)

## திருமதி சிவலிங்கம் சிவனேஸ்வரி



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் சிவனேஸ்வரி அவர்கள் (29.07.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை கிழக்கு, ஏழாலை.* (34753)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே இணக்கமேற்படுத்துமா இந்தியா?

கொழும்பு,ஜுலை31

இலங்கை சமாதான நடைமுறைகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே கருத்தொருமிப்பை ஏற்படுத்துவதற்கு இந்தியா தூதுவராகச் செயற்படவேண்டும்.

- இவ்வாறு இலங்கை சமாதான தூதரகத்தின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரியான கல்யாணந்த கொடகே தெரிவித்துள்ளார்.

இதுபற்றி புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேசவியல் துறைப் பேராசிரியர் பி.சகாதேவன் நேற்றிரவு பி.பி.ஸியின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியின் போது:-

இந்தியா இந்த முயற்சியில் முன்பிருந்தே ஈடுபட்டு வருவதாகவும் -

ஆனால், தற்போதைய சூழ்நிலையில் ஒரு தூதுவர் மூலம் முறைப்படியாக இதற்கு இந்தியா முயற்சிக்குமா என்பது சந்தேகமே என்றும் - கூறியுள்ளார்.

ஆனால், கொடகே கூறியிருப்பதுபோன்று இந்திய அரசாங்கத் தலைவர்கள் நேரடியாக இதில் ஈடுபடாவிட்டாலும் ஏனைய அரசியல் தலைவர்கள் மற்றும் முன்னாள் பிரதமர்கள் இதில் முக்கிய பங்கை ஆற்றலாம் என்று சகாதேவன் குறிப்பிட்டார். (ஒ-7)

# இளைஞர் கொலை!

சாய்ந்தமருது,ஜுலை31

சாய்ந்தமருதில் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

சாய்ந்தமருது மகளிர் பாடசாலை வீதியைச் சேர்ந்த ஆதம்பாவா அப்துல் ஹக்கீம் (வயது24) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக இலங்கையின் ஆளும்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகமும் தம்மாலான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் -

தாம் அமெரிக்கப் பிரதிநிதியிடம் வலியுறுத்தினர் என்றும் ஜோசப் பரராஜசிங்கம் கூறினார். (ஒ-7)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புகிறார் என சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் கூறினாராம். ஆனால், அவரது காதலை ஏற்க சம்பந்தப்பட்ட பெண் கான்ஸ்டபிள் மறுத்து விட்டார். அதனால் சீற்றமுற்ற கான்ஸ்டபிள் கிரனேட்டை வெடிக்கவைத்துத் தற்கொலை செய்து கொண்டதுடன் பெண் கான்ஸ்டபிளையும் பலியெடுத்தார். மற்றொருவர் காயமடைந்தார். (க)

## பட்டதாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முற்கல் 11 மணிக்கு யாழ். டி.எம்.ஜ. கல்வி நிலையத்திலும் பிற்பகல் 2 மணிக்கு சித்தன்கேணி சுப்பறா கல்வி நிலையத்திலும் இக்கூட்டங்கள் இடம்பெறும்.

நாளை முற்பகல் 10 மணிக்கு தீவகத்திலும் ஒரு மணிக்கு சாவச்சேரியிலும் பிற்பகல் 4 மணிக்கு வடமராட்சியிலும் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் கிளிநொச்சியில் கலந்துரையாடல் இடம்பெறும்.

இக்கூட்டங்களில் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவிருக் கின்றனர்.

பட்டதாரிகளைப் பயிலுநர்களாக நியமிககாமல் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்றும் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நியமனம் வழங்காது பாரபட்சம் காட்டப்பட்டதை கண்டிப்பதென்றும் -

இக்கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன என்று தெரியவந்தது.(ஒ-3)

# சுதந்திரக் கூட்டமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான கூட்டாளிக்கட்சியான ஜே.வி.பி.

புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அரசு பேச முயன்றால் உடனே அரசை விட்டு வெளியேறி, அரசைக் கவிழ்த்து விடுவோம் என்று ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

அதுமட்டுமல்ல, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து புலிகளுடன் அரசு பேச்சு நடத்துவதைக் கடுமையாக எதிர்க்கும் விதத்தில் கிராம மட்டத்தில் பெரும் எதிர்ப்பு இயக்கங்களை - பிரசாரப் போராட்டங்களை - நடத்தவும் அது தயாராகியுள்ளது.

ஜே.வி.பி. இழுத்த இழுப்புக்கு இழுபட்டுச் சென்று, அதனால் சமாதானப் பேச்சுக்கள் நடக்காமல்போனால், நாட்டுக்கு சர்வதேச நிதியுதவி கிட்டாது. நாடு எதிர்வு கூறமுடியாத பொருளாதாரச் சிக்கலில் மூழ்கும். அத்தோடு, அரசுத்தரப்பின் சமாதான விரோதப் போக்கினால் போர் மீண்டும் மூளும் ஆபத்தும் உள்ளது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் அதற்கு முகம்கொடுக்க முடியாமல் பேரழிவுகளை அரசும் நாடும் சந்திக்க வேண்டி வரும். இது போன்ற யதார்த்த நிலைகள் அரசுத் தலைமையையும், ஜனாதிபதியையும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

மேலும், கொழும்பு, கொட்டாவப் படுகொலைச் சம்பவத்தை அடுத்து, புலிகளின் பிரதேசத்திற்குத் தப்பிச்சென்ற - கருணா குழுவில் முன்னர் அங்கம் வகித்த - நபர்கள், கொழும்பில் கருணா குழுவிற்கும், அரசுப்படைகளுக்கும் இடையிலான தொடர்புகள், சேர்ந்து தீட்டப்பட்ட திட்டங்கள், நடைமுறைகள் குறித்தெல்லாம் புலிகளின் தலைமைக்கு விலாவாரியாகத் தகவல் தந்து விட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

அண்மையில் கிளிநொச்சிக்கு வந்த நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனிடம் இந்த விடயங்களை புலிகளின் தலைமை முழு விவரமாக எடுத்துரைத்தது என்று கூறப்படுகின்றது.

சமாதான முயற்சிகளையும் ஆக்கபூர்வமான நிலையில் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்காமல், கருணா குழுவைப் பயன்படுத்தி பின் கதவால் புலிகள் இயக்கத்தை அழிக்க முயல்வது போன்ற நடவடிக்கைகளை அரசுத் தரப்பு மேற்கொள்வது விபரீதமான விளைவுகளுக்கே வழி செய்யும் என ஹெல்கிஸனிடம் புலிகள் எடுத்துரைத்தனர் என்று கூறப்பட்டது.

இந்த விடயங்களை கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்த சமயம் அவரிடம் எடுத்து விளக்கிய ஹெல்கிஸன், யுத்தம் தவிர்க்க முடியாதது என்ற நிலை உருவாகி வருவதாகவும் சுட்டிகாட்டினார்.

அதை அறிந்த ஜனாதிபதி அதிர்ச்சியில் உறைந்தார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஜே.வி.பியுடன் கூட்டு வைத்தமையே இந்த இழுபறிக்கெல்லாம் காரணம் என்ற முடிவுக்கு வந்துள்ள ஜனாதிபதி ஹெல்கிஸனுடனான சந்திப்பை அடுத்து, தனது நெருங்கிய சகாக்களான அமைச்சர்களை அழைத்தார். நிலைமையை விளங்கப்படுத்தினார். ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேரும்படி முன்னர் தம்மை வற்புறுத்திய தனது நெருங்கிய சகாக்களை அவர் கண்டித்தார்.

ஜே.வி.பியைக் கைவிட்டுவிட்டு அரசைத் தக்க வைப்பதற்கு மாற்று ஒழுங்கு ஏதேனும் செய்யமுடியுமா என்பதை ஆராயும்படி ஜனாதிபதி அவர்களைக் கேட்டுக் கொண்டாராம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இ.தொ.க, ஸ்ரீலங்க முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி போன்ற கட்சிகளின் ஆதரவையும் ஐ.தே. கட்சியிலிருந்து சில எம்.பிக்களினது ஆதரவையும் திரட்டி அரசைத்தக்க வைப்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பியின் போக்கு மேலும் தீவிரமடைந்து வரும் நிலையில், தற்போது தாய்லாந்து சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டது. (க)

## நெடுந்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிகாணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் யாழ். மாவட்ட பிரதிநிதி ஆன் வல்வே புதிதாக கடற்படை முகாம் அமைக்கப்படும் தபால் நிலையப் பகுதியைப் பார்வையிட்டதுடன், அது தொடர்பாக நெடுந்தீவு தபாலதிபருடன் கலந்துதுரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் தென்பகுதியில் உள்ள கைத்தொழில் நிறுவனங்களும் பங்கேற்கவுள்ளன. அந்த நிறுவனங்கள் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களை எமது பகுதிக் கைத்தொழிலாளர்களும் அறிந்து கொள்ளும் நோக்குடனேயே அவர்களை இக்கண்காட்சிக்கு அழைத்துள்ளோம். - என்று வணிகர் கழகத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இக்கண்காட்சி பற்றி ஆராய்வதற்கென உள்ளூர் கைத்தொழிலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் வணிகர் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூர் கைத்தொழிலாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கண்காட்சி பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

## ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற சந்திப்புக் குறித்து நோர்வே பிரதிநிதிகள் அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

இதுதவிர, சமாதான முயற்சிகள் குறித்த தற்போதைய சூழ்நிலை, கிழக்கு நிலைவரங்கள், இலங்கை அரசின் அசமந்தப் போக்கு, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின நிலை, இடைக்கால நிர்வாக அலகு போன்ற பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்தும் இப்பேச்சின்போது பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4-7)


நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை
A/L 2005, 2006
கலை
பொருளியல் BY. மதி B.A.(Hons) Eco (spl.)
வரலாறு BY. சுஜீகரன்
★ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
★ வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. (34735)

பதவி வெற்றிடம்
எமது நெல்லியடிக் கிளை நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் பதவிக்கான வெற்றிடமுள்ளது. மேற்படி பதவிக்கான நேர்முகப்பரீட்சை 06.08.2004 (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
தகைமைகள்
◆ வடமராட்சியை வதிவிடமாகக் கொண்டிருத்தல்.
◆ கணனி அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.
குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்போர் தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
இயக்குநர்
Institute of Business Management Studies (IBMS)
NMMV Road, Nelliady.

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS. (33927)

BEACON யாழ்நகர்
A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள்
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்: 02-08-04
திங்கள் 7a.m. (34694)

Dip . in Hardware
Period - 72 Hours
Time 09.30 - 16.30
Batch v
03/08/2004 லிருந்து 16/08/2004 வரை
மிகக் குறுகிய காலம், மிகப்பயன் மிக்க,
யாழ் நகரில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்படும் இப்பாடநெறியில் இணைந்து பயன்பெறுவதற்காக உடன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
பதிவுகளுக்கு
SIP Computer World(pvt)ltd.
73, Palaly Road, Kantharmadam.
Branch: Sankaththanai, Chavakachcheri
Your Partnert in IT solution

புதிய பிரிவு
ஆரம்பம்: 01.08.2004 10.00 a.m.

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Ms Office | 3 Months | 1800.00 |
| Diploma in Internet Technology | 3 Months | 3000.00 |
| Diploma in Hardware Engineering | 4 Months | 3750.00 |
| Diploma in Desk Top Publishing | 3 Months | 2400.00 |

★ மிகக் குறைந்த கட்டணம்.
★ அதிநவீன வசதிகளுடன் கூடிய கற்பித்தல் முறைமை.
★ தவணை முறையிலான கட்டண வசதி.
மேலதிக விவரங்களுக்கு: இயக்குநர் IBMS
(சி-36038) # 410, K.K.S. Road, Jaffna.

Computing for Kids
சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி விடுமுறைக் கால பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
Sky Computers (Pvt)Ltd.
89, Kandy Road,
Chundikuli,
Jaffna.
(36616)(40-11-16)

New Stocks Available
மிகக் குறைந்த பணத்துடன் மிகப் பெறுமதியானதை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்
Pentium I, II, III
IBM, Compaq, Dell
ரூ17,000/- லிருந்து
இலவச பராமரிப்பு சேவையுடன்
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna

JAFFNA CENTRAL COLLEGE - JAFFNA
Annual Prize Giving 2004
Sunday 1st August 2004
at 10.00 am. in. TAMBER HALL
Chief Guests
Mr. A.R. Surendran President's Counsel &
Mrs. Renukathevy Surendran
Chairman
Rea.Fr.S. Ainsley Roshan Secretary to the Bishop
Parents, old boys and well - wishers are cordially Invited.
PRINCIPAL, STAFF & STUDENTS.
(C-36664)

J.T.I மாணவர்களுக்கான அறிவித்தல்
கடந்த இருபத்தைந்து (25) வருடங்களாக சிறப்பாக இயங்கிவரும் J.T.I நிறுவனம் அண்மையில் படித்து வெளியேறிய Radio TV Video Deck தொழில்நுட்ப மாணவர்களுக்கான 45 நாள்கள் விசேட தொழில் நுட்ப பயிற்சிநெறியும் அதனோடிணைந்த வேலைவாய்ப்பும் (வேலை வாய்ப்பு எம்மால் ஒழுங்கு செய்யப்படுகின்றது) ஆர்வமுடைய எமது பயிற்றப்பட்ட மாணவர்கள் 02-08-04 திங்கட்கிழமைக்கு முன்னர் நிறுவனத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: Registrar
Jaffna Technical Institute, 367 Navalar Road,
Illupaiyady Junction, Jaffna.
(34692)


## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் எட்வேட் (இராசா)



நெடுந்தீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் எட்வேட் (இராசா) அவர்கள் நேற்று (30.07.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் லீலாவின் அன்புக் கணவரும் சர்மிலி, மேவின் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வலத்தீஸ் மற்றும் மரியம்மாவின் அன்பு மருமகனும் மரியதாஸ், சின்னத்துரை, இராசாத்தி, மாசில்லா, குமாரி, மகாராசா, சூசை, றேமன் ஆகியோரின் சகோதரனும் குணபாக்கியம், வசந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிககிரியைகள் நாளை (01.08.2004) ஞாயிற்றுக் கிழமை நெடுந்தீவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணிக்கு நெடுந்தீவு மத்தி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு.* (34758)

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org